

117

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 JUL 1952
MADRAS

117/3.52

72
211, N4700
N52.6.9
197811

இப்பொழுது தமிழ்நாடு, கேரளம்
முதலிய இடங்களில் நடைபெறுகிறது
புரொடக்ஷன்ஸ்
வேலைக்காரன்
வள்ளி
ஏவிஎம் ஸ்டுடியோவில் தயாரித்தது

நிழற்படத் தலைப்பு

கல்வாழை, கவின் வாழையாகி, கருத்துக்குக் காவியமாகி, அற்புதக் கற்பனைகளை வழங்கச் செய்திருக்கிறது. ‘எது சிறந்த தலைப்பு?’ என்று முடிவு கட்டும் பொறுப்பைச் சிக்கல் நிறைந்த பொறுப்பாக்கி வருகிறார்கள் நண்பர்கள். பல தலைப்புகள் ஒன்று போல நின்று ‘எனக்கே பரிசு’ ‘எனக்கே பரிசு’ என்று போட்டியிடும் நிலை வளர்வது கண்டு மகிழ்கிறோம்.

சென்னை நகரத்தில் ஒருகாட்சி இத்தடவை நிழற்படமாக மிளிர்கிறது. நண்பர் ஏ. சம்பத் கிருஷ்ணன் வழங்கியுள்ள இப்படததில நடுவீதியில் நின்று அரசோச்சும் சிவப்புத் தொப்பிககாரர்களைக் காணுகிறோம்: தூரத்தே வரும் போலீஸ்காரனைக் கண்டு கூட அஞ்சிய நமக்குச் சுதந்தரம் வந்த பிறகு, போலீஸ்காரர்கள் மிகமிகச் சாதாரணமானவர்களாகி விட்டார்கள். ஆனால் சட்டத்தையும் அமைதியையும் நிலை நிறுத்தும பணியில் ஈடுபட்டுள்ள அச்சகோதரர்களை நாம் எப்படி மறக்க முடியும்? போக்குவரத்தை முச்சந்தியில் கட்டுப்படுத்தும் பொறுப்பு பெரிது! ‘நில்’ என்றால் நிறுத்த வேண்டும்; ‘செல்’ என்ற பின்னரே செலலவேண்டும். மன்னாதி மன்னரும் இந்த நடுத்தெரு மன்னரின் ஆணையை மீற முடியாது. போலீஸ்காசர்களைப் பற்றிய வர்ணனை போதுமல்லவா? உங்கள் கற்பனையுள்ளத்தில் அவர்களைத் தக்க தமிழ்ச் சொற்களால் தீட்டுங்கள். சிறந்த தலைப்புக்கு ரூபாய் ஐந்து பரிசு காத்திருக்கிறது. **20-6-52**-க்குள தலைப்புகளை அனுப்பிவையுங்கள். சென்ற இதழ் பரிசு விவரத்தை வேறொரு பக்கத்தில் காணுங்கள்.

பொன்னி

மலர் 6	ஜூன் 10, 1952	இதழ் 9

திருவள்ளுவர் ஆண்டு 1983
வைகாசித் திங்கள் 28-ம் நாள்

பொருளடக்கம்

நிழற்படத் தலைப்பு ... 1
அரிசிப் பங்கீடு ... 3
ஆடும் மாடும் (தொடர்கதை) ... 6
சோலைக் கிளி ... 17
கைப்பாவை ... 23
அன்பின் எல்லை ... 27
அழகெல்லாம் எங்கொளித்தாய்? ... 32
கண்மணி ... 34
பெண்கள் முன்னேற்றம் ... 38
பூந்தோட்டம் ... 42
வேனிற்காலத்திற்கு ... 45
உணர்ந்த உள்ளம் ... 54
பொழுது போக்கு ... 59
பேசிவிட்டோம் ... 62

★

பொன்னி சந்தா விவரம்; உள்நாடு, இலங்கை ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6—0—0; ஆறுமாதம் ரூ. 3—0—0. வெளிநாடு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 6-12-0; ஆறுமாதம் ரூ. 3-6-0. இலங்கைக்கு வி.பி.பி. உண்டு

புதுமைப்பித்தன் சிறுகதைப் போட்டி

● பொன்னி அறிவிக்கும் இம் முதல் சிறுகதைப் போட்டியில் **பரிசு ரூ. 250-யை முதற் பரிசு ரூ. 125; இரண்டாவது பரிசு ரூ. 75; மூன்றாவது பரிசு ரூ. 50** ஆகப் பிரித்துக் கொடுக்க எண்ணியிருக்கிறோம்.

● **அறிஞர் கா. அப்பாத்துரை**, திரு. **விந்தன்**, திரு. **அகிலன்**, திரு. **டி.கே.சீனிவாசன்**, திரு. **முருகு சுப்பிரமணியன்** ஆகிய ஐந்து பேர் கொண்ட ஒரு குழுவினர் பரிசுக்குரிய சிறுகதைகளைத் தேர்ந்தெடுப்பார்கள். அவர்களில் பெரும்பாலோரின் தீர்ப்பே முடிவானதாகும். பரிசுத் திட்டத்தில் இடம் பெற்ற கதைகளுள் எந்தச் சிறுகதையும் பரிசு பெற உகந்ததல்ல என்று தீர்ப்புக் குழுவினர் கருதினால், வந்தவற்றுள் சிறந்தவற்றிற்கு ஆசிரியர் விருப்பப்படி பரிசுகள் வழங்கப்படும். இப்போட்டி பற்றி எழும் எல்லா ஐயப்பாடுகளிலும் ஆசிரியர் தீர்ப்பே முடிவானதாகும்.

● பரிசுத் திட்டத்திற்கு அனுப்பப்படும் கதைகள் இதுவரை வெளியிடாதனவாக இருக்கவேண்டும். மொழிபெயர்ப்பாகவோ, தழுவலாகவோ இராமல், சொந்தமாக எழுதியவையாக அமையவேண்டும். கதைகள் 'பொன்னி'யில் 6 பக்கங்களுக்குக் குறையாமலும், 16 பக்கங்களுக்கு அதிகப்படாமலும் இருக்கவேண்டும். **1952 ஜூன் 30-ம்** தேதிக்குள் வரும் கதைகளே பரிசீலனைக்கு இடம்பெறும்.

அரிசிப் பங்கீடு

உலகப் போர் தந்த கேடுகளில் ஒன்று பங்கீடு. பங்கீட்டு முறை போர்க்காலத்தில் தேவைப்பட்டது. போர் முடிந்த பின்னரும் பங்கீடு நீடிக்கவேண்டிய நிலை இருந்தது, இன்னும் உணவுப் பங்கீட்டை நீக்கிவிடத் தக்க சூழ்நிலை ஏற்பட்டுவிடவில்லை. என்றாலும் சென்னை அரசினர் உணவுப்பொருள் விலை, வினியோகம், கொள்முதல் பற்றிய எல்லாக் கட்டுப்பாடுகளையும் நீக்கி இருக்கின்றனர். நாம் இந்த மாறுதலை வரவேற்கிறோம்; நாடெங்கும் மக்கள் வரவேற்பதாகச் செய்திகள் கூறுகின்றன.

உணவுப்பொருள் நாட்டில் பற்றாக்குறையாக இருக்கும் நிலையில் பங்கீடு அவசியமென்பதும் கட்டுப்பாடு தேவை என்பதும் யாரும் மறுக்கமுடியாத நியதிகள். ஆனால் கட்டுப்பாடு நீக்கப்பட்டிருக்கிற இந்நிலையில் பற்றாக்குறை நீங்கிவிட்டதாக யாரும் எண்ணினால் அது தவறான முடிவேயாகும். பங்கீட்டு முறை ஏற்படக் காரணமான பற்றாக்குறை இன்னும் இருக்கிறது. ஆனால் பங்கீட்டு முறை எடுக்கப்பட்டிருக்கிறது! இவ்விசித்திரச் சூழ்நிலையைப் புரிந்துகொள்வது அவசியம். பங்கீட்டு முறை நீக்கப்பட்டிருப்பது கேட்டு மக்கள் மகிழ்ச்சியடைகிறார்கள், குறைந்த விலையில், வாரந்தோறும் ஒரு குறிப்பிட்ட அளவு அரிசி கட்டாயமாகக் கிடைத்துவந்த நிலை முறிக்கப்படுவது மக்களுக்கு எப்படி மகிழ்ச்சியளிக்க முடியும்? பங்கீட்டுக் கடையை விட்டு வெளியே அரிசி வாங்கினால் விலை கூடுதலாகக் கொடுக்க வேண்டுமென்று தெரிந்திருந்தும் அவர்கள் எப்படி இந்நிலையை வரவேற்க முடியும்?

இம்முரண்பாடான மகிழ்ச்சிக்குக் காரணமிருக்கிறது, அவர்கள் பங்கீட்டு முறையை வெறுக்கவில்லை; ஆனால் அது

கடந்த எட்டு ஆண்டுகளாக அமுல் செய்யப்பட்டு வந்த விதத்தையே வெறுக்கிறார்கள். பங்கீட்டு முறையினால் வரும் நன்மைகூட வேண்டாமென்று 'தியாகம்' செய்யும் அளவுக்கு, பங்கீட்டு நிர்வாகம் ஊழல் நிரம்பியதாக, தொல்லை நிறைந்ததாக விளங்கியதே மக்கள் வெறுப்புக்குக் காரணமாகும். அதாவது அரசினர் உணவுப் பொருளைக் கொள்முதல் செய்வதிலோ, விலையைக் கட்டுப்படுத்துவதிலோ, வினியோகம் செய்வதிலோ வெற்றி பெறவில்லை என்பதுதான் மக்கள் காட்டும் மகிழ்ச்சியின் பொருளாகும். பங்கீட்டுக் கடையில் கிடைக்கும் அரிசியோடு மக்கள் நிற்கவில்லை; கள்ளமார்க்கட்டில் தங்கள் தேவையைப் பெற்றுக்கொண்டு வந்திருக்கிறார்கள் என்று அரசினரே ஒப்புக்கொள்கின்றனர். அவர்களுடைய கொள்முதல் திட்டம் வெற்றி பயக்கவில்லை என்பதை இச் செய்தி காட்டவில்லையா? 'ரேஷன்' தொடங்கியநாள் முதல் 'பிளாக்மார்க்கட்' அரிசி இருந்து வந்திருக்கிறதே, அதை அரசாங்கக் கட்டுப்பாடு எந்த அளவுக்குக் குறைக்க முடிந்தது? பத்திரிகைகளில் 'பிளாக்மார்க்கட்' அரிசியின் விலை விவரங்கள்கூட வருமளவுக்கு 'எதும்செய்ய இயலா' நிலையில்தானே கட்டுப்பாடுகளை அரசாங்கம் அமுல்செய்து வந்திருக்கிறது! உணவுப் பொருள் கட்டுப்பாடு பெருந் தோல்வியாக முடிந்தது ...

'கட்டுப்பாடு நீக்கம்' என்ற முற்றுப்புள்ளியில் வந்து நிற்கிறது என்பதை மக்கள் நன்கு புரிந்துகொள்ளவேண்டும்.

உணவுப்பொருள் கட்டுப்பாடு என்பது சென்னையைப் பொறுத்தவரையில் அரிசிக் கட்டுப்பாடுதான்! மற்றவைகளைச் சேர்த்துக்கொள்வது தேவையே இல்லை. சென்னையில் ஏற்பட்டிருக்கிற பற்றாக்குறையும் அரிசிப் பற்றாக்குறைதான். கட்டுப்பாடுகளை நீக்கியிருப்பதால் ஏற்பட்டிருக்கும் புதிய நிலை என்ன? பச்சையாகச் சொல்ல வேண்டுமானால் 'பிளாக் மார்க்கட்' வியாபாரத்தைச் சட்டபூர்வமாக ஆக்கியிருக்கிறார்கள். முன்பு 'ரேஷன்' கடைகளில் அரிசி வாங்குவதும் விற்பதும் தான் சட்டப்படி சரியான காரியங்கள். மற்றபடி வெளியே அரிசி வாங்குவதோ விற்பதோ தண்டனைக்குரிய குற்றங்கள். இக் குற்றங்களைச் சட்டப்படி சரியானவை என்று அறிவித்திருப்பதுதான் சர்க்காரின் புது உணவுக்கொள்கையின் சாராம்சம்! கட்டுப்பாடுகள் இருந்த போதும், நீக்கிவிட்ட இப்போதும் பிளாக்கில் அரிசி வாங்குவதும் விற்பதும் தடையின்றி நடந்துவந்தன என்பது அரசாங்கம்கூட மறுக்காத உண்மை. கட்டுப்பாடுகளை அமுல் நடத்த முடியாத நிலையில் 'குற்றங்களை'ச் சட்டபூர்வமான செயல்கள் என்று அறிவித்திருக்கிறார்கள் அரசாங்கத்தார்! இம்மாறுதலைக் கெட்டிக்காரர்கள்

மட்டுமே செய்யமுடியும் என்பதை ஒப்புக்கொள்கிறோம். அமுல் நடத்த முடியாத விதிகளைக் கைகழுவுவது 'புத்திசாலித்தனமே' யாகும். எனவே தான் சர்க்காரின் புது உணவுக் கொள்கையை நாம் வரவேற்கிறோம்.

ஆனால் மக்களுக்குத் தேவையான உணவுப்பொருளை நியாயமான விலையில் கிடைக்கச் செய்வது அரசாங்கத்தின் பொறுப்பு என்பதை நாம் வற்புறுத்திக் கூற விரும்புகிறோம். பற்றாக்குறை நிலையில் கட்டுப்பாடும் பங்கீடும் அவசியம் என்பதை யாரும் மறுத்துவிட முடியாது. 'இவர்களால் முடியவில்லை—எடுக்கிறார்கள். இவர்கள் நடத்துவதைக் காட்டிலும் எடுப்பது மேல்' என்ற ஒரே காரணத்தால் தான் அரிசிப் பங்கீடு ஒழிவதை நாம் விரும்புகிறோம். புதுக் கொள்கையால் உணவுப் பொருள் பற்றாக்குறை என்ற கூப்பாடு 'செயற்கையானது' என்று விளக்கமானால் நாம் மகிழ்வோம். அரிசிக்கு ஏற்பட்ட அசாதாரண மதிப்பு நீங்கி, பழைய நிலை ஏற்படுவது சர்க்காரின் புதுக் கொள்கை அமுல் செய்யப்படுவதைப் பொறுத்திருக்கிறது! சூழ்நிலைக்கேற்ப விலையைக் கூட்டும் சூதாடிகளின் பேராசையைச் சர்க்கார் எப்படிக் கட்டுப்படுத்தப் போகிறார்கள் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்.

பரிசு முடிவு

25-5-52 இதழ் தலைப்புப் போட்டியில் பரிசு பெற்ற தலைப்பு:

பாவையர் கண்டும் பறிக்காத செண்டு

பரிசு பெற்றவர்:

எம். எஸ், ராமசாமி முதலியார் ராயப்பேட்டை, சென்னை.

பாராட்டுக்குரியவை:

தேன் சீசா—உண்ணும் தட்டு
அ. பொன்னுயிரம், ஸ்ரீவில்லிபுத்தூர்

கனியுதவாக் கல்வாழை மலர் விரித்து மயக்குவதேன்?
—பா. முருகையன், சிதம்பரம்

மரகதத் தட்டில் தங்கச் சோறு
சா. நாகராசன், மணக்குடி

சிரிக்கும் கன்னியோ! சிங்கார வாழையோ!
இர. தவம், வாணக்காடு தோட்டம்

இலையின் அரங்கில் மலரின் நடனம்
த. நீலாம்பாள், சிதம்பரம்

பதினெட்டாவது அத்தியாயம்

செக்கிலே சிக்கிய எள்ளைப் போலச் சீரழிந்துகொண்டிருந்தாள் மோகனா. உலகம் தன்னுடைய அத்தனை பிரச்சனைகளையும் ஒதுக்கிவைத்துவிட்டு, அவளைப்பற்றியே கவலைப்படத் தொடங்கியிருந்தது. எங்கேயிருந்து முளைத்தாள் இந்த அழகி என்பதே அதன் ஆராய்ச்சியாகிவிட்டது. அவளைப்பற்றி எழுதாத பத்திரிகையில்லை; பேசாத ஆளைப் பார்ப்பதே அரிதாக இருந்தது. வில்லாக வளைந்திருக்கும் கேள்விக்குறியில் ஆச்சரியக்குறியை அம்பாகச் செருகி அவளை நோக்கி எய்தனர் எல்லோரும். "நீங்கள் யார்? எந்த ஊர்? எப்படிச் சினிமாத்துறைக்கு வந்தீர்கள்?"—இந்தக் கேள்விகள் அவள்

இதயத்தைத் துளே போடத் தொடங்கின. எங்கெங்கோ சித றிக் கிடக்கும் இதயங்களே அவ ளிடம் ஏந்தி எடுத்துவந்த அஞ் சல் அட்டைகளும் உறைகளும் அளவுக்குமீறிக் குவிந்தன. கையெழுத்துக் கேட்பவர்களும், கருத்துரைகளே வழங்கச் சொல் லுபவர்களும், காதல் பிச்சை வேண்டுபவர்களும், கல்யாணம் செய்துகொள்ளவே துணிந்து முடிவு செய்துவிட்டவர்களும், தங்கள் கோரிக்கைகளேக் கலே நயங் குறையாமல் கடிதங்களாக உருமாற்றியிருந்தார்கள்; அந்தப் புது முகத்தைப் பொது முக மாக்கத் துடிக்கும் சினிமாக் கம் பெனி முதலாளிகள் பேரம் செய்யத் தொடங்கினர். பணம் படைத்த காரணத்தால் பட்டுப் பூச்சிகளேத் தேடித் திரியும் திமி ரெடுத்தவர்கள் தினந் தினம் விஜயம் செய்து அவளேத் திடுக் கிடச் செய்தனர். கதைகளேயும், நாவல்களேயும் படித்துவிட்டுக் காதலேக் கற்றுக்கொள்ளும் 'அமெச்சூர்கள்' ஒழிந்த வேளே யில் அவளோடு ஒத்திகை நடத் திப் பார்க்க அலேந்துகொண் டிருந்தனர். இதற்கிடையில் இந் தப் பத்திரிகைக்காரர்கள் வேறு அவளேப் படாத பாடு படுத்தி வைத்தனர்.

ஆனல்... ஆலயத்துக்கு வரு பவர்கள் எல்லாம் அங்கிருக்கும் மணியில் ஒலியெழுப்பிச் செல்லு வதைப் போல, அவள்மேல் அக் கறை கொண்ட அத்தனே பேரும் அவள் வரலாற்றைப்பற்றிக் கேட்டு வதைசெய்யத் தவற வில்லே. "நீங்கள் யார்? எந்த ஊர்? எப்படிச் சினிமாத் துறைக்கு வந்தீர்கள்?"—வீட்டுக் குள்ளேயே இந்த வினக்கள் தங்கியிருந்து வினடிக்கு வினடி எதிரொலிக்கத் தொடங்கின. இவற்றைக் கேட்டுக் கேட்டு மோகனுவின் மூளே குழம்பியது. திகிலும் கலவரமுமாகவே தினந் தினம் தேதித் தாட்களேக் கிழிக் கத் தொடங்கிஞள். வெள்ளி முளேப்பதே வேதனேயாகப்பட் டது அவளுக்கு. நீண்ட பகலும் நேரங் குறைந்த இரவுமாகவே ஒவ்வொரு நாளும் ஆகிவிட் டதோ என்று சந்தேகப்பட் டாள். இந்த நேரத்தில் சோமு இருந்தால......? இந்த எண்ணந் தான் ஏற்பட்டது அவளுக்கு. 'சோமு', 'சோமு' என்று கூவியழைக்கத் தொடங்கியது அவள் உள்ளம்.

அயர்ந்து உறங்கிக்கொண் டிருந்த சுந்தரி அன்று எப் படியோ திடீரென விழித்துக் கொண்டாள். தற்செயலாகத் திரும்பி மோகனுவைப் பார்த் தாள். ஏதோ சிந்தனேயில் எங் கேயோ பார்த்துக்கொண்டிருந்த அவளேப் பார்த்தபோது சுந்தரிக் குத் திகைப்பாகத்தான் இருந் தது. அந்த நள்ளிரவில் அயர்வே தோன்றுமல் அவள் எப்படி...? இரத்தம் குன்றி வெளுத்துப் போனதால் சலவைக்கல் சிலே போலச் சாய்ந்து உட்கார்ந் திருந்த அவளேயே பார்த்தாள். நிம்மதி நிறைந்த அந்த நேரத் தில் நீல நிற விளக்கொளியில் நிழலுருவம்போல அவள் அமர்ந்

திருந்த நிலை சுந்தரியின் நெஞ்சைத் தொட்டது. எழுந்து அவளருகில் சென்று அனுதாபத்தோடு கவனித்தாள். அவதி நிறைந்த முகம் அமைதியழிந்த

உள்ளத்தைத் துக்காட்டியது.

நிமிர்ந்து அவளைப் பார்த்தாள் மோகனை. பற்றி எரிந்த தன் வீட்டைப் பார்த்துக் கொண்டே உட்கார்ந்திருக்கும் அதன் சொந்தக்காரனுடைய பார்வைக்கும், அவள் பார்வைக்கும் எந்தவித வேற்றுமையும் இருந்ததாகத் தெரியவில்லை சுந்தரிக்கு. பரி

வோடு தன் கையால் அவள் தோளைப் பற்றினுள்.

"தேன்கூடு தலைக்கு மேலே இருக்கிறது என்பது தெரியாமல் அதன் கீழே இருந்துவிட்டேன், சுந்தரி. என்னிடம் அறிவிக்காமலே அதன்மேல் கல்லை எறிந்துவிட்டார் சினிமாக் கம்பெனி முதலாளி. கூட்டம் கூட்டமாகத் தேனீக்கள் அதிலிருந்து வெளிப்பட்டு என்னைக் கொட்டித் தொலைக்கின்றன"

சுந்தரிக்கு நடப்பதெல்லாம் தெரிந்தே இருந்தது. அவள் ஏன் தன்னைப்பற்றி எதையும் தெரிவிக்க மறுக்கிறுள் என்பது தான் புரியவில்லை.

"தொல்லையை நீயாகத்தானே வரவழைத்துக்கொள்ளுகிறுய், அக்கா. உன்னைப்பற்றித் தெரிந்துகொள்ள உலகம் ஆசைப்படுகிறது. நீ ஏன் ஒளித்து வைக்கிறுய்?"

"தெரிந்துகொள்ளாவிட்டால் உலகம் தேய்ந்தா போகும்?"—கோபம் கலந்திருந்தது மோகனுவின் குரலில்.

"நீ இந்தத் துறைக்குப் புதிதாகையால் எதுவும் புரியவில்லை உனக்கு. தன் வாழ்வில் குறுக்கிடுபவர்களைப் பற்றித் தெரிந்துகொள்ளவேண்டும் என்று சமுதாயத்துக்கு ஆவல் ஏற்படுவது சகஜமானதுதான்"

"நீ கூடவா இப்படிப் பேசுகிறுய், சுந்தரி? நான் மட்டும் தானு சமூகத்தின் வாழ்வில் குறுக்கிடுகிறேன்? எத்தனையோ பேர் இருக்கிறுர்களே! உணவு கொடுக்கும் உழவர்கள்—இருக்க இடம் அமைத்துத் தரும் தொழிலாளிகள்—கால் நோகாமல், வெய்யிலில் வேதனைப்படாமல் நடக்க உதவும் சக்கிலியர்கள் அழுக்குருவங்களாக அலையாமல் ஆடைகளை வெளுத்துக் கொடுக்கும் சலவைத் தொழிலாளிகள்—இதைப்போன்ற எண்ணற்றேர் அதன் வாழ்வில் குறுக்கிடுகிறுர்களே! இவர்கள் எல்லாம் அதன் அன்றுட வாழ்வுக்குத் தேவையானவர்கள். இவர்களைப் பற்றித் தெரிந்து கொள்ளவேண்டும் என்று ஆசைப்படுவதில்லை இந்தச் சமுதாயம். அதன் பொழுதுபோக்குச் சாதனங்களில் ஒன்றுன என்னைப்பற்றி மட்டும் தெரிந்து கொள்ள ஏங்கித் தவிக்கிறது! இதை ஒரு சமுதாயம் என்று ஏற்று மதிக்க உனக்கு மனம் வருகிறதா, சுந்தரி?"

சுந்தரி திகைத்துப் போனுள். சோறு என்று மெல்லக் கல் பல்லில் கடிபட்டால்... கேட்ட கேள்விக்குப் பதில் கிடைக்கவில்லை. அந்தக் கேள்வியைக் கேட்பதே தவறு என்கிறுள்! தங்கள் பெயர் பத்திரிகையில் தோன்ற எதைதையோ தத்தம் செய்யத் தயாராக இருக்கும் எத்தனையோ பேரை அவள் பார்த்திருக்கிறுள். ஆனுல் அவர்களை யெல்லாம் இந்தப் பத்திரிகைக்காரர்கள் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை, 'விடமாட்டோம்' என்று ஒவ்வொரு நாளும் இவளைச் சுற்றியே வேலி யிடுகிறுர்கள். ஆனுல் இவளோ......ஒரு வேளை, குடும்ப கௌரவத்துக்

குக் குறை ஏற்பட்டுவிடும் என்ற எண்ணத்தால்......

"தொடக்கத்திலிருந்தே நீ சினிமா உலகத்தைப்பற்றி மட்டமாகவே நினைக்கிறாய். பைத்தியமே! சமூகத்தில் ஏற்படும் சாகாத பிரச்சனைகளில் அதுவும் ஒன்றாக ஆகிவிட்டது. நடிகை நாட்டின் உயிர் நாடியாகிவிட்டாள். அதுமட்டுமல்ல; தங்களுக்குத் தாங்களே உயர்ந்த ஜாதி என்று விலாசமிட்டுக் கொண்ட வகுப்பார் இன்று பட உலகத்தில் மண்டி மலிந்து விட்டனர். அவர்கள் எந்தத் துறையில் காலடியெடுத்து வைத்தாலும் அதற்கொரு தனி அந்தஸ்தை உண்டாக்கிவிடுகிறார்கள். அதனால் பாடுவதும் பரதநாட்டியமாடுவதும் போல, படத்தில் நடிப்பதும் பாமரர்களுக்குத் தேவையான பழக்க வழக்கங்களில் ஒன்றாக மாறி விட்டது!"

சிரிக்கச் செய்கிறாளா, அல்லது சிந்திக்கத் தூண்டுகிறாளா, என்பது விளங்கவில்லை மோகனாவுக்கு.

"இதையெல்லாம் என்னிடத்தில் ஏன் சொல்லுகிறாய், சுந்தரி?" என்றாள்.

"நீ இப்போது தேனாகிவிட்டாய் சமுதாயத்துக்கு. இயற்கைத் தேனா அல்லது செயற்கைத் தயாரிப்பா என்று தெரிந்துகொள்ளத் துடிக்கின்றனர் மக்கள். நீ மட்டும் உன்னைச் சுற்றித் திரையிட்டு மறைக்கிறாய். தங்கம் சிலையாக உருக்கி வார்க்கப்பட்ட பிறகு, மறுபடியும் சுரங்கத்துக்குள்ளேயே போய்விடவேண்டும் என்பது எப்படிப் புத்திசாலித்தனம் ஆகும்?"

வெறுப்பில் உருவாகும் சிரிப்பொன்று வெளிப்பட்டது மோகனாவிடமிருந்து.

"இந்தத் தங்கத்தைப்பற்றி உனக்குத் தெரியாது. அது எத்தனையோ மாறுதல்களை அடைந்து, கடைசியில் இந்நிலையை அடைந்திருக்கிறது!"

இனம் விளங்காத ஏதோ ஒரு உலகத்தில் இருந்துவிட்டு வந்தவள் போல, எதையோ பிதற்றும் அவளைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது சுந்தரிக்கு. பதினைந்தாம் நூற்றாண்டில் வாழ வேண்டியவள் எப்படி இருபதாவது நூற்றாண்டில் இடம் பெற்றாள் என்பது புரியாமல் திகைத்தாள்.

நாட்களை விரட்டி ஓட்டிக் கழித்துக்கொண்டிருந்தாள் மோகனா. அவைகள் என்னவோ இவளுடைய மிரட்டலுக்கு அஞ்சாமல் நகர்ந்துகொண்டுதான் இருந்தன. மேடு பள்ளங்களே நிறைந்த பாதையில் கடையாணிகள் இல்லாத வண்டியில் மூக்கணாங்கயிறற்ற மாடுகளைப் பூட்டி ஏறிப் போவதுபோலிருந்தது வாழ்க்கை அவளுக்கு. ஏதாவது ஒரு ஆபத்து ஏற்பட்டால் அது அவளை உருத்தெரியாமல் அழித்துவிடும் என்பதை உணர்ந்தே இருந்தாள். வீடு அவளை வெட்டித் துண்டாடியது; அதிலிருந்து வெளியேறி வீதிக்குப் போகலா



மென்றாலோ....மருந்தின் கசப்பு மாறாமல்நாக்கில் இருப்பதுபோல மறைந்த நிகழ்ச்சிகளை மறக்காமல் அவள்மனம் நினைவிலேயே வைத்திருந்தது.

அன்று சேகரனுக்கு என்ன தோன்றியதோ, தெரியவில்லை.

“மோகனா! நான் ஏதாவது கேட்டால் கோபித்துக்கொள்ளுவாயா?” என்றான்.

அவனை வேடிக்கையாகப் பார்த்தாள் அவள்; வேதனையும் கலந்திருந்தது விழிகளில். இவன் வேறு குப்பையைக் கிளறி......

“கோபம் உண்டாகாதபடி கேளுங்களேன்” என்றாள்.

“நீ ஏன் உன்னைப்பற்றி எதையும் தெரிவிக்க மறுக்கிறாய்?”

சாவதானமாக அவன் கேட்ட கேள்விக்குச் சமாதானமாகப் பதிலளிக்க மோகனாவுக்கு மனம் வரவில்லை. எரிச்சலோடு அவனை ஏறெடுத்துப் பார்த்தாள்.

“இத்தனை நாட்களாக என்னோடு இருக்கிறீர்களே. என்றாவது என்னிடம் இந்தக் கேள்வியைக் கேட்டதுண்டா?” என்றாள் கோபத்தோடு.

“தேவைப்பட்டிருந்தாலல்லவா கேட்டிருப்பேன், மோகனா” என்றான் சேகரன்.

அவனுக்கு விஞ்ஞான உள்ளமிருந்திருந்தால் விவரங்களைப் பற்றிக் கவலைப்பட்டிருப்பான். ஓவியனாதலால் உருவத்தோடு நிறுத்திக்கொண்டான் தன் நினைவுகளை. ஆனால் அது ஒரு குறைவாக மோகனாவின் மனதில் படிந்து மலையாக வளர்ந்திருப்பதை உணர நேரும்போது......

“தெரிந்துகொள்ளவேண்டும் என்ற ஆசைகூடவா உண்டாகவில்லை உங்களுக்கு?”

தூண்டிவிட்ட விளக்கைப்போலானது மோகனாவின் துயரம். அத்தனை நாட்களாக அடக்கிவைத்திருந்த உணர்ச்சிகள் எல்லாம் அவளை மீறி வெளிப்பட்டன. கூண்டிலே நிறுத்தப்பட்டிருக்கும் கைதியைக் காட்டிக் குற்றப்பத்திரிகை வாசிக்கும் சர்க்கார் தரப்பு வக்கீலைப்போலானாள் அவள்.

“சேகர்! சிறுபிள்ளைகள் கொலுப்பொம்மைகளை வைத்து விளையாடுவதைப்போல் என்னையும் ஒரு வேடிக்கைப் பொருளாகத்தானே மதித்து நடந்தீர்கள் இதுவரையில்? என் வாழ்வில் இடைப்பட்ட ஒரு நெருக்கடியால் என் நெஞ்சு நெருப்பாகப் பற்றி எரிந்துகொண்டிருந்ததைக் கவனிக்கவேயில்லை நீங்கள். உங்கள் சுயநலத்துக்குப் பயன்படும் பதுமையாக என்னை

வினைத்தீர்களே தவிர, என்னுடைய சுகவாழ்வைப்பற்றி நீங்கள் கவலைப்படவேயில்லை. எழிலோவியமாக உங்கள் முன்னால் தோன்றும் என்னுடைய இதயம் ஒரு எரிமலையாகப் புகைந்துகொண்டிருக்கிறது. ஓடிக்கொண்டிருக்கும் ரயில் வண்டியில் இருந்துகொண்டு, அது கடந்துசெல்லும் சிறு ரயில்வே ஸ்டேஷனைக் கவனிப்பதைப் போலத்தான் என்னையும் பார்த்தீர்கள். ஆனால்... நீங்கள் இறங்கவேண்டிய ஊரே நான் தான் என்று சொல்லி ஏமாற்ற மட்டும் தவறவில்லை! இதற்குத்தானா சேகர், நான் சோமுவை மறந்தேன்—நீங்களும் சக்குவைத் துறந்தீர்கள்?"

ஒழுங்குபடுத்தப்படாமல் உதிர்ந்து விழுந்த இந்தச் சொற்கள் சேகருடைய உள்ளத்தைத் தாக்கின. எதுவுமே விளங்கவில்லை அவனுக்கு—அவளையே பார்த்தான்.

இது நடந்து இரண்டு மூன்று நாட்கள் கழிந்துவிட்டன. ஸ்டுடியோவுக்கும் வீட்டுக்குமாக அலைந்துகொண்டிருந்தனர் சுந்தரியும் மோகனும். எழிலைப் பார்ப்பதும் அதை அப்படியே திரையில் தீட்டுவதுமாகவே காலத்தைக் கழித்துக்கொண்டிருந்தான் சேகரன்.

அன்றைக்கு அவன் விலாசமிட்ட ஒரு கடிதம் வந்திருந்தது. ஆச்சரியத்தோடு அதைப் பிரித்துப் படிக்கத் தொடங்கினான்.

மேலே ஏறிக் காய்களைப் பறித்துக்கொண்டிருந்த போது, அடிமரத்தை யாரோ வெட்டி வீழ்த்தியது போலானது அவன் நிலை. இரத்தம் கொதிப்பேறியதால் உடல் முழுதும் வெப்பத்தால் கொப்பளித்தது. அவனிருந்த வீதியைச் சேர்ந்த 'அந்த மாடி வீட்டுக்காரர்' அந்தக் கடிதத்தை எழுதியிருந்தார்.

"சக்கு—விபச்சாரம்—தெரு—அவமானம்!"

இந்தச் சொற்கள் நான்கும் சூறைக்காற்றைப்போல அவனைச் சுற்றிச் சுழலத் தொடங்கின. அதிலேயே சிக்கி அடித்துச் செல்லப்பட்டான் அவன்.

"சேகர்! படமெடுத்தாடும் பாம்பாக உன்னைத் தொடர்ந்து பழிவாங்குவேன்!" என்றசொற்கள் அவன் செவிகளில் ஒலிக்கத் தொடங்கின. அவன் மன அரங்கில் சோமு தோன்றினான். பேயைப் பார்த்ததில்லை, சேகரன் இதுவரையில்; அதன் சிரிப்பை மட்டும் கேட்டான் சோமுவிடமிருந்து அப்போது. வெட்கம்—மானம்—மரியாதை—கௌரவம்! வெட்டி வீழ்த்தப்பட்டுத் துடித்துக்கொண்டிருந்த இந்தச் சொற்களை வேதனையோடு பார்த்தான். அவனுக்கு அங்கே இருக்



கப் பிடிக்கவே இல்லை. எழுந்து நடந்தான் வெளியே.

மாலையில் அவன் திரும்பி வந்தபோது அந்தக் கடிதத்தைப் படித்துக்கொண்டிருந்தாள் மோகனா.

"இனி நான் எப்படி வாழ்வேன், மோகனா?" என்று வாய் விட்டுக் கதறிவிட்டான் சேகர்.

"தீர விசாரிக்காமல் தீர்ப்புக் கூறுவது தவறு, சேகர்! தவறியும் சக்கு அப்படி நடந்திருக்க மாட்டாள்!"

"நான் விசாரித்துவிட்டேன். வீதியில் தலை நீட்ட முடியவில்லை. நான் சந்தித்த அத்தனை பேரும் அதையே சொன்னார்கள். இந்தக் களங்கத்தை நான் எப்படி மாற்றுவேன், மோகனா?"

படபடப்பும், துடிதுடிப்புமாகச் சொற்களைக் கொட்டிய சேகரனைப் பார்க்க மோகனாவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது.

"சொல்லுபவர்களில் பெரும்பாலோருக்குச் சொரணையே இருப்பதில்லை, சேகர்! இது வரையில் இப்படிப்பட்ட பேச்சுக்களால் எத்தனையோ பெண்களுடைய வாழ்வைச் சிதைத்திருக்கிறார்கள் அந்த இதயமற்றவர்கள்"

"அவ்வளவு அறியாதவன் அல்ல நான். அவளைப்பற்றி முழுதும் விசாரித்துவிட்டேன். அந்தத் தெருவிலேயே பெரிய பணக்காரர் கடிதம் எழுதியிருக்கிறார். அவருக்கு இவளை ஏச வேண்டும் என்ற எண்ணமா ஏற்பட்டிருக்கும்? அந்த விபச்சாரிக்காகப் பரிந்து..."

"சேகர்...!"

அவன் பேசி முடிப்பதற்கு முன்னாலேயே ஊத்துக் கூவி விட்டாள் மோகனா. குமுறத் தொடங்கிய உள்ளம் அவள் உடலைக் கொதிக்கச் செய்தது. உலகமே பற்றியெரிவதைப் போலத் தோன்றியது அவளுக்கு. அளவுக்கு மீறிய அந்த ஒளியைப் பார்க்க முடியாமல் அவள் விழிகள் கூசின. இருப்பதைவிட எரிந்து சாம்பலாகி விடுவதே மேல் என்ற எண்ணத்தால் அதையே பார்த்துக்கொண்டிருந்தாள்.

மயங்கி விழுந்த அவளை மடி மேல் தாங்கிக்கொண்டு மூர்ச்சையைத் தெளிவிக்கும் முயற்சியில் ஈடுபட்டான் சேகரன்.

* * *

ஒளி மங்கியிருந்த அந்த நேரத்தில் ஏற்றாமல் விடப்பட்ட விளக்கையே ஏக்கத்தோடு பார்த்தாள் சக்கு. சாற்றற்ற சக்கையாக ஆகியிருந்த அவள் உள்ளத்தில் எந்தவிதச் சலனமும் ஏற்படவில்லை. தன் தவறாலேயே இருள் சூழ இடங்கொடுத்த அந்தப் பேதைக்கு அந்தகாரத்தைப் பொறுமையோடு ஏற்றுச் சகித்துக்கொள்ளுவதைத் தவிர வேறு வழியேதும் இல்லாமல் போனது.

"அக்கா! ஏன் இருட்டாக இருக்கிறது?" என்று கேட்டுக்கொண்டே உள்ளே நுழைந்தான் வாசு.

மாம் ஆ, வாசு. இருட்டாகத் தான் இருக்கிறது. விளக்கில் எண்ணெயுமில்லே; ஏற்ற நெருப் புக் குச்சியுமில்லே!" என்று அமைதி குலேயாமல் பதிலளித் தாள் சக்கு.

"இரு அக்கா. வருகிறேன்" என்று எதையோ எடுத்துவா வெளியே ஓடினன் வாசு.

வீதியோரத்து மின்சார விளக்குகள் கண்விழித்தன. தெருவில் சிந்தியதுபோக எஞ்சி யிருந்த மிச்சத்தை அந்த வீட் டுக்குள்ளும் தூவிவிட்டன அவை. உள்ளே கவிந்திருந்த இருளில் ஒளி லேசாகக் கலந்த தால், அதன் கோரம் தணிந்து காணப்பட்டது. அன்ருட நட வடிக்கைகளில் ஒன்ருன அந்தி வேளேக்கூத்து ஆரம்பித்தது உடனே. சக்குவுக்குக் கோபமோ கூச்சமோ ஏற்படவில்லே. ஏற் பட்டுத் தீரவேண்டிய எத் தனேயோ நிகழ்ச்சிகளில் அது வும் ஒன்ருகத்தான் தோன்றி யது. இருள் தன்னே ஒளித்துக் கொள்ள ஆண்டவன் அளித்த அருள் எனத்தான் நினேத்தாள்.

வாசு, தீப்பெட்டியும் எண் ணெயுமாக வீட்டுக்குள் நுழைந் தான். விளக்கு ஏற்றப்பட்டது. தான் கொண்டுவந்திருந்த பொட் டலங்களே யெல்லாம் அவள் முன் வைத்தான் வாசு.

"காலேயிலிருந்து பட்டினி கிடக்கிருயே, அக்கா. பலகாரங் கள் வாங்கி வந்திருக்கிறேன். சாப்பிடு" என்ருன்.

"இதற்கெல்லாம் உனக்கேது பணம்?" என்று கேட்டாள் சக்கு.

"சொன்னல் கோபித்துக் கொள்ளமாட்டாயே"

"இல்லே, சொல்லு"

"அப்பா பையிலிருந்து எடுத் தேன்"

"அபாயம்—தொடாதே" என்ற அறிவிப்போடு அவள் வீட்டுக்கு முன்னலிருந்த மின்சாரக் கம்பத் தைப் போலத் தோன்றினன் வாசு சக்குவுக்கு.

"திருடக்கூட ஆரம்பித்து விட்டாய். நீ இப்படி நடப்பாய் என்று நான் எதிர்பார்க்கவே இல்லே, வாசு" என்ருள்.

அவளே நிமிர்ந்து பார்த்தான் வாசு. அவள் விழிகள் வெளிப் படுத்திய வெறுப்பும் அரு வருப்பும்...

"திருடுவது தவறு என் கிருயா, அக்கா? எங்கள் பள்ளிக் கூடத்தில் ஒரு பையன் இருக் கிருன். கடைக்காரனிடமிருந்து அவர்களுக்குத் தெரியாமல் மிட்டாய்களேயும் பழங்களேயும் அடித்துக்கொண்டு வந்துவிடு வான். அவனேத்தான் புத்தி சாலி என்று ஆசிரியர்களே புகழு கிருர்கள். எல்லாப் பையன் களும் அவனேடு பழகத்தான் ஆசைப்படுகிருர்கள்"

எரிச்சல் தாங்கமுடியவில்லே சக்குவுக்கு. ஓங்கி ஒரு அறை கொடுத்தாள் அவன் கன்னத்தில்.

"சீ! நீ வசவாக் கெட்டுப் போய்விட்டாய். இனிமேல் இங்கே வராதே. என்னேடு பேச்சுவார்த்தைகள் வைத்துக் கொள்ளாதே."

அடி இவனுக்கு விழுந்திருக்க, அழுவது அவளாக இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டான் வாசு. அடிப்பானேன்—பிறகு அதற்காக அழுவானேன் என்று சிந்திக்கத் தொடங்கினுன். வெய்யிலில் நடந்து வந்தவன் வீட்டுக்குள் நுழைந்தவுடன் எதுவும் புரியாமல் மயங்கி நிற்ப தைப் போலச் சிறிதுநேரம் அமைதியாக இருந்தான்.

"அக்கா, உனக்கு உலகமே தெரியவில்லை; அதனுல்தான் இப்படியெல்லாம் பேசுகிருய். இதெல்லாம் தவறு என்று எல்லோரும் நினைத்தால் உன் வீட்டுக்கு முன்னுல் நடக்கும் அக்கிரமத்தை எப்படிச் சகித் துக்கொண்டிருக்க முடியும் அவர்களால்? எல்லோருமே மனச்சாட்சியை விற்றுவிட்டார் கள். நீ மட்டுந்தான் நீதி, நியாயம் பேசுகிருய். மண்டுகளின் மத்தி யில் அதிக 'மார்க்'குகள் வாங்குபவன் அகப்பட்டுக் கொண்டால் அவனை மட்டந் தட்டத்தான் முயற்சிப்பார்கள் எல்லோரும்"

"இல்லை, வாசு. நான் இதை யெல்லாம் சாப்பிட முடியாது. எடுத்துக்கொண்டு போ."

அவள் குரலில் தொனித்த பிடிவாதம், கோபத்தை உண் டாக்கியது வாசுவுக்கு.

அறிவிப்பு

★

'பொன்னி'யுடன் தொடர்பு கொண்ட விற்பனையாளர்கள், சந்தாதாரர்கள், எழுத்தாளர்கள் அனைவரும் இனி அலுவலகத் திற்கு அனுப்பப்படும் கடிதங் களின் விலாசத்தில் **தபால் பெட்டி எண் 1165**, சென்னை-21 என்பதை அவசியம் குறிப்பிட்டு அனுப்பவேண்டுகிறேம்.

பொறுப்பாளர்.

"அப்படியானுல் பட்டினி கிடந்து சாகப் போகிருயா?" என்று கூச்சலிட்டான்.

பெருமழையின் அறிவிப் பாகக் கருமேகங்கள் திரளுவ தைப் போல் அவன் விழிகளில் நீர் துளிர்த்தது. அதைச் சக்கு கவனித்தாள். அவனை அழவிட அவளுக்கு மனம் வர வில்லை; அதற்காக அவன் செய்த தவறை அவளால் மன்னிக்க முடியவில்லை.

"செய்த பாவங்களுக்கு அனுபவிக்கும் தண்டனை போதாதா, வாசு? இந்தப பாவத்தை வேறு நான் ஏற்றுக் கொள்ளவேண்டும்?"

"உன்னுல் பாவமே செய்ய முடியாது, அக்கா. யாரோ

செய்த குற்றத்துக்காக நீ தண்டனை அனுபவிக்கிறாய்."

அழுது முடித்தவர்கள் அமைதியாகத் தங்கள் வேதனைக்குக் காரணமான விஷயங்களை வெளியிடுவது போல அவன் பேசினான். பற்றி எரியும் பட்டமரத்தின் பக்கத்திருந்ததால் அந்தப் பச்சை மரமும் வாடி வதங்கி யிருந்தது. ஏற்றி வைத்த விளக்கிலேயே பார்வையை ஈடுபடுத்தியிருந்தாள் சக்கு.

"இதையெல்லாம் நீ சாப்பிட வேண்டாம், அக்கா. நான் ஒன்று கேட்கிறேன். பதில் சொல்லுகிறாயா?" என்றான் வாசு.

"என்ன வாசு?" என்று விளக்கைப் பார்த்துக்கொண்டே கேட்டாள் சக்கு.

"நீ ஏன் அத்தானையே உயிர் என நம்பியிருக்கிறாய்?"

அவன் உள்ளத்தை ஊடுருவிப் பார்ப்பதுபோலச் சிறிது நேரம் அவனையே பார்த்தாள் சக்கு. பிறகு சொல்லத் தொடங்கினாள்.

"உன்னிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்லப் போகிறேன், வாசு. அத்தான் என்னுடன் பழகத் தொடங்கும் போதே அவர்தான் என் கணவர் என்று அறிமுகப்படுத்தி வைத்தார்கள் என் அப்பாவும் அம்மாவும். சிறு வயதிலிருந்தே எப்போதும் சேர்ந்தே இருந்தோம். அடக்கமாகப் பேசவேண்டும்—அன்போடு பழகவேண்டும்—அவர் மனம் நோகாமல் நடக்க வேண்டும் என்று எனக்குக் கற்பித்த அறிவுரைகள் எல்லாம் என் மனதில் வேரூன்றி விட்டன. நான்கைந்து ஆண்டுகளுக்கு முன்னால் ஒருநாள், நான் இந்த அம்பிகையின் படத்துக்கு முன்னால் நின்று கும்பிட்டுக்கொண்டிருந்தேன். நான் கண்ணை மூடிக்கொண்டிருந்த போது அத்தான் என் பின்னால் வந்து அம்மனுக்குப் போட்டிருந்த மாலையை எடுத்து என் கழுத்தில் போட்டுவிட்டார். திரும்பிப் பார்த்தேன்; அவர் சிரித்துக்கொண்டே அப்பால் நடந்தார். அம்பிகையறிய அன்றிலிருந்தே நானும் அவரும் கணவனும் மனைவியுமாகிவிட்டோம். எப்படி அவரை மதிக்காமல் இருக்கமுடியும், வாசு?"

வற்றுங்குளத்திலேயே வாழ்ந்து வாடிவிடும் செடிகொடிகளை உயர்வாக மதிக்க வேண்டும் என்று பள்ளிக்கூடத்தில் வாசுவுக்குச் சொல்லிக் கொடுத்திருந்தார்கள். அது அவன் நினைவுக்கு வந்தது. அதுவரையில் அவனோடு சமமாகப் பழகி வந்த அவனுடைய அக்காள் எவ்வளவோ தூரம் உயர்ந்து காணப்பட்டாள்.

"என்னை மன்னித்துவிடு அக்கா; நான் சொன்னதெல்லாம் தவறு" என்று முணுமுணுத்தன வாசுவின் உதடுகள்.

(தொடரும்)

சோலைக் கிளி

தமிழேந்தி

கவர்ச்சிகரமான அழகு; அழகுக்கேற்ற மேனி; மேனிக்கேற்ற மிடுக்கு; மிடுக்குக்கேற்ற வேலை; வேலைக்கேற்ற சுளையான சம்பளம்; இவ்வளவும் போதாதென்று சொத்துக்கொழித்த கௌரவமான பாரந்த குடும்பம்; அதுவும் போதாதென்று எல்லா விதங்களிலும் மங்களம் நிறைந்த ஜாதகம்;

கசக்குமா என்ன!...

காமுவுக்கு, அவளுடைய அருமைத் தந்தை சதாசிவப் பிள்ளை, மற்றுமுள்ள எல்லோருக்கும், மணக்கவந்த மாப்பிள்ளையை அறிந்து தெரிந்ததும், மலைத்தேனில் துவைத்தெடுத்த பலாச்சுளையைப்போல மனசாரப் பிடித்துப்போயிற்று!

பிள்ளைவீட்டார்க்கும் அப்படித்தான். பெண்—அவளைச் சார்ந்த சகல சமாச்சாரங்களிலும் மிகவும் மனத்திருப்தி கொண்டார்கள்.

அப்புறமென்ன இருக்கிறது? இனி 'ஜாம் ஜாமெ'ன்று திருமணம் நடக்கவேண்டியதுதான் மிச்சம்!

பேச்செல்லாம் சுபமாக முடிந்தது. சதாசிவப்பிள்ளை பெண் பார்க்க வந்தவர்களை வண்டியேற்றி அனுப்பிவைத்துவிட்டு நெஞ்சம் பூரித்துக் குலுங்க வீட்டுக்கு வந்தார். வீட்டு வாசலில் அவரின் அபிமான வேலைக்காரனை மருதமுத்து கக்கத்தில் துண்டை இடுக்கிய வாறு காத்துக்கொண்டிருந்தான்.

"என்னடா மருதை, என் ஒரு மாதிரியாய்க் கிடக்கிறே? வேலையெல்லாம் முடிஞ்சுதா?" என்று கேட்டுக்கொண்டே, மேல் துண்டினால் திண்ணையைத் தட்டிவிட்டு உட்கார்ந்தார் சதாசிவப் பிள்ளை.

மருதமுத்து தலையைச் சொரிந்தபடி தயங்கினான். முயற்சிசெய்து உருவாக்கிய வாக்கியங்கள் தொண்டைப் பாதையில் வந்துமாட்டிக்கொண்டன. ஒரு வார்த்தைகூட வெளிவரவில்லை.

"ஏண்டா தயங்குறே? ஏதாச்சும் பணம் கிணம் வேணுமா?"

"ஆ...மா...ங்...க..."

"இப்ப எதுக்குப் பணம்? எங்கேயாச்சும் ஊருக்குப் போறியா? போன மாசந்தானேடா கன்னியாபுரத்துக்குப் போய் வந்தே?" என்று கேட்டுக் கொண்டே திண்ணைச் சாய்வின் மீது மெல்லச் சாய்ந்தார்பிள்ளை.

"ஆமாங்க, போய்த்தான் வந்தேன். அப்போ போய் வந்த விஷயத்துக்குத்தான்......"

"அது என்னடா விஷயம்? இன்னொரு பொண்டாட்டி கட்டிக்கப்போறீயா என்ன? அப்படித்தான் ஏதாச்சும் செஞ்சுக்கப்போறேடா. வயசுக்கு வந்த பொண்ணு ஒருத்தியிருக்கிது..." என்று இழுத்துக்கொண்டே, கழுத்தை முறுக்கித் திருப்பி வீட்டிற்குள் பார்வையைப் பாய்ச்சி "காமு! வெத்திலேச் செல்லத்தைக் கொண்டுவா!" என்று கூறிவிட்டு, மறுபடியும் சரியாகச் சாய்ந்துகொண்டார் பிள்ளே. காமு காந்த நடை நடந்துவந்து வெற்றிலேச் செல்லத்தைத் தந்தையின் பக்கத்தில் வைத்துவிட்டு, வாசல் விளிம்பிற்குள் பதுங்கிநின்றுள்.

"காளிக்கிக் கண்ணுலத்துக்கு ஏற்பாடு பண்ணி.."—மருதமுத்து விஷயத்தைக் கொட்டிக்கொண்டிருக்கும்போதே குறுக்கிட்டாள் காமு.

"யாருக்கு... நம்ப காளிக்கா? உம் மகளுக்கா?" என்று ஆனந்தத்துடன் கேட்டாள் காமு, மருதையை நோக்கி.

"ஆமாம்மா. எங் கண்ணிருக்கும்போதே ஒரு கண்ணுலத்தைச் செஞ்சி, கண்குளிரப் பார்க்கணும்னு...ஒரே மகள்!..." என்று சொல்லிவிட்டு, காவிக் கறை படிந்த பல்லேக் காட்டிநின்றுன் மருதை. அவன், அந்தச் செல்வக் குடும்பத்து அன்பைப்பெற்ற குடும்பத்து வேலேக்காரன். ஆதரவு இல்லாமல் போகுமா?

"அதுக்கெல்லாம் ஒன்றும் கவலேவேண்டாம், மருதை. காளியின் கல்யாணத்தை முடிச்சு வைக்கிறது அப்பாவினுடைய பொறுப்பு, ஆமாம். மாப்பிள்ளே எந்தப் பக்கம்?" என்று புன்னகையுடன் கேட்டாள் காமு.

"எல்லாம் சொந்த மாப்பிள்ளே தாம்மா. கன்னியாபுரத்துலே இருக்கிற என் தங்கச்சி மவன் தான்" என்றுன் மருதை மனங்குளிர. வந்து வேண்டிய காரியம் இனிதாக முடிந்துவிட்டதல்லவா!

"அடடே! அந்தப் பையனு!... ரொம்பப் பொருத்தந்தான்! மருதை, நீ உன் காரியத்தைக் கவனி. நம்ப காமுவினுடைய கலியாணம் ஆன மறு மாசமே காளிக்கும் ஒரு கல்யாணத்தைத் தடபுடலாச் செஞ்சுவைக்கலாம்" என்று சொல்லிக்கொண்டே நீண்ட கொட்டாவி விட்டார் பிள்ளே.

"என்னவோ உங்க புள்ளெ மாதிரி ... நான் வாறேங்க" என்று ஒரு கும்பிடு போட்டுவிட்டு அங்கிருந்து நழுவிச் சென்றுன் மருதை.

* * *

காமுவுக்குக் கல்யாணம் நடந்து முடிந்தது, ரொம்பத் தடபுடலாக. நாட்களும் கிறுகிறுவென்று பறந்தன. அவள் புக்ககம் செல்லும் ஒரு வாரத்திற்கு முன்னேயே, மருதமுத்துவின் மகள் காளிக்கும் சதாசிவப் பிள்ளே

வின் மேற்பார்வையில் விமரிசையாகக் கல்யாணம் நடந்து முடிந்தது.

ஒரு வாரம் கழித்து, காமு புக்ககம் சென்றாள். அவள் சென்ற ஒன்றிரண்டு மாதங்களில் காளியும் தன் மாமியார் வீடு சென்றாள்.

* * *

காலம் தேய்ந்துகொண்டிருந்தது.

காமு புக்ககம் சென்று எட்டு மாதங்கள் உருகிக் கரைந்து விட்டன. சதாசிவப்பிள்ளைக்குக் காமுவைப் பிரிந்ததிலிருந்து மனசே சரியில்லை. காமுவைப் பார்க்க அவருக்கு உயிரே துள்ளியது. அவர் காமுவைப் பார்க்கத் துடித்துக் கிளம்பினர். மருதை அவருடைய சிறிய டிரங்குப் பெட்டியைத் தூக்கிக்கொண்டு வீட்டைவிட்டு வெளியே வந்தான். பிள்ளை கைத் தடியை எடுத்துக்கொண்டு அவன் பின்னல் வந்தார்; வந்தவரைத் தடுத்து நிறுத்தி, தந்தி ஒன்றைக் கொடுத்துப் போனான் தபால்காரன்.

பிள்ளைக்கும், மருதைக்கும் பேரிடி விழுந்ததைப் போன்ற அதிர்ச்சி! பிள்ளை தந்தியைப் பார்த்தார்.

'தூக்கத்திலேயே இறந்து போனார் மருமகன்...'

உலகம் 'கிர்' என்று சுழன்றது!

* * *

பொட்டு இழந்த காமு, வீட்டிற்கு வந்து சுமார் ஒன்றரை வருடங்கள் உருண்டு போய்விட்டன. பாவம்! வான வில்லுக்கு உவமை கூறும் தன் வாழ்வை நினைத்து நெஞ்சம் பிளக்க அழுது அழுது......!

ஹூம்! பிறக்கும் பொழுதும் அழுகை; வாழும் பொழுதும் அழுகை; சாகும் பொழுதும் அழுகை; பெண்ணாய்ப் பிறந்து விட்டால்?

தன் ஒரே மகளின் அவல வாழ்வை எண்ணி எண்ணிப் புழுங்கிய தன் விளைவாக, படுத்த படுக்கையாய் ஆய்விட்டார், பெண்ணைப் பெற்ற பிள்ளை.

மருதை மனமிடிந்து உலாவினான். இதுபோன்று தன் அருமை மகள் காளியின் வாழ்விலும் இருள் படரக்கூடாதே என்று அவன் அனுதினமும்—அனவரதமும்—காளியாத்தாளைப் பிரார்த்தித்துக்கொண்டு வந்தான்.

என்ன பண்ணி என்ன பலன்?

கோழி பலி கொடுத்தாலும் சரி; கோபுரம் கட்டி வைத்தாலும் சரிதான்; இயற்கை தன் பணியை ஒழுங்காக நடத்தித்தான் தீருகிறது!

திடீரென்று ஒரு நாள். கன்னியாபுரத்திலிருந்து பறந்தோடி வந்த ஒரு ஆள், "உங்க மருமகன், காளைமாடு முட்டி குடல் அறுந்து செத்துட்டான்!" என்ற திடீர்த் துக்கச் செய்தியை மருதமுத்துவிடம் வீசிச் சென்றான்!

மருதையின் இதயம் ஒரு கணம் நின்று, மறுகணம் மறுபடியும் புயல் வேகத்தில் உதைத்துக்கொண்டது!

மருதமுத்துவின் உத்திரவுப் படி, காளி அவள் மாமியார் வீட்டிலேயே இருந்துவிட்டாள். ஏதோ, ஒன்றிரண்டு சமயம் வந்து மருதையை—பிள்ளையை—காமுவை—எல்லோரையும் சந்தித்துப் பேசிவிட்டுப் போனுள். அவ்வளவுதான். அத்தோடு இரண்டு வருஷமாகியும் அந்தக் கிராமத்துப் பக்கமே தலைகாட்டவில்லை.

ஒருநாள் ஏனே பிள்ளைக்குத் காளியைப் பார்க்க மனத்தில் ஒரு சிறு அவா எழும்பியது. மருதையைக் கூப்பிட்டார். அவன் துண்டைக் கக்கத்தில் இடுக்கிக்கொண்டு, "என்னுங்க எசமான்?" என்று கூவித் தாவிப் பாய்ந்தோடி வந்து, பிள்ளைக்கெதிரே நின்றுன்.

"உம் மகள் காளி எங்கேடா? கண்ணிலேயே காணோம்! மாமியார் வீட்டிலேயே தத்தாயிட்டாளா, என்ன?"

பிள்ளை இப்படிக் கேட்பார் என்று எதிர்பார்க்காத மருதைக்குக் கொஞ்சம் வியப்பாகத்தான் இருந்தது. அவன் மௌனஞ் சாதித்து நின்றுன்.

"என்னடா, கேட்கிறேன்... அவளை இங்கே வரவழை...என்னமோ, அவளைப் பார்க்கணும்னு இருக்குது," என்று கூறிக்கொண்டே படுக்கையிலேயே மெதுவாகப் புரண்டு படுததார் பிள்ளை.

"சரிங்க" என்று அங்கிருந்து நகர்ந்தான் மருதை.

ஒரு வாரம் கழித்து பிள்ளையின் வீட்டுவாசலில் "எஜமான்" என்று ஒரு பெண்ணின் குரல் கேட்டது. வீட்டிற்குள் வெறுந்தரையில் உருண்டுகொண்டிருந்த காமு, மெல்ல எழுந்து உட்கார்ந்து "யாரது?" என்று பதிலுக்குக் குரல் கொடுத்தாள்.

"நாந்தாமமா காளி!"

காமு துள்ளிப் பதைத்தெழுந்து கண்களைத் துடைத்

துக்கொண்டு வாசலுக்குப் பாய்ந்தோடிச் சென்று பார்த்தாள். வாசலில் துயரம் தோய்ந்த முகத்துடனும், இடுப்பில் சிறு குழந்தையுடனும் நின்றுகொண்டிருந்த காளி, பூவும், பொட்டும், மஞ்சளும், வளையலும் அற்றுக் காட்சியளித்த காமுவைக் கண்டு கதறியேவிட்டாள்! காமுவும் கதறத்தான் செய்தாள்; எனினும் மனசைத் தேற்றிக்கொண்டு, காளியையும் தேற்றி அழைத்துக்கொண்டு பின் கட்டிற்குச் சென்றாள். அவளுக்குக் காளியின் இடுப்பிலிருந்த குழந்தையைப் பார்த்ததுமே அவளின் தீப்பிடித்த உள்ளம் மெல்லப் புகைய ஆரம்பித்தது.

எம்மா, வீட்டுலே யாருங் காணுமே! எங்கே எஜமான் என்று கேட்டுக்கொண்டே அப்போதுதான் சிணுங்க ஆரம்பித்த குழந்தைக்குப் பால் கொடுக்க ஆரம்பித்தாள் காளி.

காமுவுக்கு மனம் கிறுகிறுத்தது!

“எண்டி, இது யாருடைய குழந்தை?”

“ஏன்! எங்கொழந்தை தான்!”

“மருதை உனக்குக் குழந்தை பிறக்கவில்லேன்னு சொன்னானே?”

“ஆமம்மா. அப்போ பொறக்கலேதான். அப்புறமா...” என்று அச்சம், அதிசயம், இரண்டின் சுழலிலும் சிக்கித் திணறும் காமுவைப் பார்த்து வெட்கத்துடன் சொல்லி, பேச்சை முடிக்காமல் இழுத்து நிறுத்தினாள்.

ஆசிரியர்: யானைகளை எங்கு கண்டுபிடிக்கலாம், சொல்.

மாணவன்: யானைகள் மிக மிகப் பெரிய மிருகங்களாயிற்றே, ஸார். அவை எப்படிக் காணாமல் போகமுடியும்?

"அப்புறமா?"— இதயம் படபடக்கக் கேட்டாள் காமு. காளி முதலில் தயங்கத்தான் தயங்கினாள். ஆனாலும் அவள் சொன்னாள்.

"அப்புறமா.....அங்கேயே இன்னொருத்தரை.........வச்சுக்கினேன்..."

கணவன் இறந்த பத்தாம் மாதத்தில் மனத்தைத் தேற்றிக்கொண்டு மாமியாரின் ஒப்புதலின்பேரில் மற்றொருவனைக் கணவனாக ஏற்று வாழ்வைத் தொடர்ந்து துவங்கி விட்ட காளி, கொஞ்சம் நாணத்தோடேயே சொன்னாள்.

காமுவுக்குத் திகீரென்றது. மயிர்க் கால்கள் சிலிர்த்துக் கொண்டன. வியர்வை நீராய்க் கொட்டியது. உள்ளத்தில் சூறாவளி!

கொஞ்ச நேரத்திற்குள் வெளியே போயிருந்த பிள்ளையும், மருதையும் வீட்டிற்கு வந்துவிடவே, காளி அவர்களிடம் எழுந்து சென்றாள். காமு மீண்டும் தனிமையைத் தழுவினாள். அவள் மனத்தில் ஒரே புகை மூட்டம்! அவள் நெஞ்சுக் கடலில் ஒரே கொந்தளிப்பு! குமுறல்!

"அவளும் பெண்தான். நானும் பெண்தான். அவள் மீண்டும் வாழ்கிறாள்; ஆனால், நான்...?"

காமுவுக்கு நினைக்க நினைக்க நெஞ்சு வெடித்துவிடும்போல் இருந்தது. அழுகை பொங்கிக் குமுறிக்கொண்டுவந்தது.

அவள் அழுதாள்!

பாவம்! கேடுகெட்ட சமூகத்திற்கு அடிமைப்பட்டுக் கிடந்து உழலும் மடமை மண்டிய சூழலில் பிறந்தவள் காமு. அவள் வதைபடுகிறாள்; கூண்டுக் கிளியைப்போல! 'விதவை' என்ற வார்த்தைக்கு அர்த்தம் புரியாத- பொருள் விளங்காத சூழலில் பிறந்தவள் காளி. அவள் ஆனந்தமாக வாழ்கிறாள், சோலைக் கிளியைப்போல!

ஹூம்! பவளப் பதுமையாட்டமாப் பெண்! யாரை நொந்து என்ன பண்றது? கொடுத்து வைத்தது அவ்வளவுதான்!...

அந்தாதிக் கதை—2

கைப்பாவை

தங்கமணி

"ஹூம்!.... பாவம், பவளப் பதுமையாட்டமான பெண்!... யாரை நொந்து என்னபண்றது? கொடுப்பினை அவ்வளவுதான்!..."

"கலியாணம் பண்ணி இன்னும் சரியா ஒரு வருஷங் கூட ஆகல்லே... இதுக்குள்ளே அடப் பாழுங் கடவுளே! அவன் தலை எழுத்து இப்படியா இருக்கணும்!..."

"மனுசன், கொஞ்ச நேரமாச்சும் ஓய்ஞ்சிருந்தாத்தானேய்யா பகல் முச்சூடும் பேச்சும், ராப் பூராவும் எழுத்தும், படிப்புமாய்க் கிடந்தாக்க... இரும்பு இயந்திரங்கூடத் தேய்ஞ்சுப் போகுதே!..."

இப்படிப் பலதிறப்பட்ட பிலாக்கணங்கள்!

இன்னும் சற்றைக்குள் நிகழ் காலத்துப் பிணமாக இருக்கிறான் அவன். அவனைச் சூழ்ந்து எதிர் காலத்துப் பிணங்கள், அநுதாப ஒப்பாரியிட்டுக்கொண்டிருந்தன.

அவன் சாகக் கிடந்தான்.

'இன்னும் சில நிமிடங்களுக்குள் அவன் செத்தே விடுவான்!' ஏகோபித்த எண்ணக் கலவை இது!

அவன் கிடந்தான்.

உப்பிலிட்ட தோலாய்க் கைத்து...ஒரே கோரம்!

கண்டால் கண்களும், கேட்டால் கருத்துங் குமட்டும் அநுதாபத்திற்குரிய — அருவருப்புக்குரிய—நைந்த நிலை!

மூச்சு மட்டும் இழையோடிக் கொண்டிருந்தது.

"இதோ!..இப்போதே....போய் விடுவேன்! இதோ! அதோ!..." தன்னை அடக்கியாளும் வலிமை குன்றிக் குமைந்து கிடக்கும் சடலத்தை உதறித் தள்ளிவிட்டுப் பறந்து போகப் பதையாய்ப் பதைத்துக் கொண்டிருந்தது உயிர்.

அவன் செத்துவிடுவான்!

இன்னும் சற்றைக்குள்...

அவன் தலைமாட்டில், அவனின் இளம் மனைவி, அவள் பக்கத்தில் அவளின் கிழத் தந்தை, அவருக்கும் பக்கத்தில், ஒரு காலத்தில் அவருக்கு மருமகனாய் வாய்க்கவிருந்த அவருடைய இன்றைய மருமகனின் உயிர்த் தோழன், இன்னம் பந்து மித்திர...இத்யாதி சிலர்—ஆக எல்லாரும் மரணத்தோடு அளவளாவிக்கொண்டிருக்கும் அவனை வெறித்து நோக்கிக் கண்ணீரும் கம்பலையுமாய்க் கிடந்தார்கள்.

அவன்...

அவனைத் தெரியுமோ?......

'சமுதாயத்தின் அந்தக் கோணத்தை இப்படிப் புரட்ட வேண்டும். அதன் அந்தக் கோடியை அப்படித் திருப்ப வேண்டும். அதனுடைய இந்த மாதிரித் தத்துவத்தை அந்த மாதிரியாய்த் திருத்தி...அப்படி

இப்படி' என்றெலலாம், நாட்டின் இண்டு இடுக்கு எங்கிலும் சுற்றிச் சுழன்று உயிர் கரைய ஓலமிட்டுக்கொண்டிருந்த அவனை—அந்தச் சீர்திருத்தச் சூறாவளி சின்னத் துரையைத் தெரியாமலா? தெரியாதவர்? யார்? எல்லாருக்குந் தெரியுமே!

அவன்தான்—அந்தச் சின்னத்துரைதான்... இப்போது, இந்த நடுநிசி நேரத்திலே அதோ... அந்தக் குடிசையிலே, தனக்காகவும், தன இளம் மனைவிக்காகவும் துன்ப ஓலமிடும் எதிர்காலத்துப் பிணப் பிண்டங்களுக்கு மத்தியில், நாறிப்போன கோரைப்பாயில் நிசழ்காலத்துப் பிணமாக இருக்கிறான்!

அவன் செத்துக் கொண்டிருந்தான்.

இன்னம் ஒரு வினடியோ இரண்டு வினடியோ'... மனிதன் என்ற பெயர் நீங்கும்; பிணம் என்ற பெயர் சூட்டப் பெறும். இன்னம்...

மௌனம்; அமைதி. மூக்கைச் சிந்தி வீசும் சிறு சிறு சப்த அலைகள்; விக்கல்.... விசும்பல்...

குடும்பத்துள் ஒரு சிலர், துக்கச் செய்தியைத் தெரிவிக்க, தூர பந்துக்களை நினைவுபடுத்திக் கொண்டிருந்தார்கள்.

இன்னும் சற்று நேரந்தான்.

மனிதக் கணக்கில் ஒன்று கழியும்.

நேரம் புதைந்துகொண்டேயிருந்தது.

இருந்தவர்கள் எல்லாம் இருந்த நிலையிலேயே உறங்கியாட ஆரம்பித்தார்கள். இளம் மனைவி, அவள் தந்தை, அவன் தோழன்... எல்லாருமே தூக்க மயக்கத்துடன்...

குடிசையில் கும்மென்றிருந்தது.

செத்துக்கொண்டிருந்த சின்னத்துரை, மெள்ளக் கண்ணிமைகளை அசைததான். மெதுவாகத் திறந்தான். சூழ்நிலைக் காட்சிகள் யாவும் மங்கித் தெரிந்தன.

மூச்சு, தட்டுத் தடுமாறி இழைந்தது.

கண் பொந்திற்குள் புதைந்து கிடந்து வெளிறிய விழிகளை மெதுவாக உருட்டினன். பக்கத்தில் தூங்கியாடிக்கொண்டிருந்த தன் தோழனைப் பார்த்தான். கவிந்த மேகப் படலங்களுக்கு அப்பால் தெரியும் உருவம் போன்று அவன் தெரிந்தான்.

எலும்புக் கை மெல்ல அசைந்தது; புரண்டது.

கூப்பிடத்தான் எண்ணம்.

எண்ணத்தைச் செயலாக இயக்கும் சக்தி...?

அவன் கை, தோழனின் கால் விரல்களைத் தீண்டியது. தோழன் திடுக்கிட்டான். விழித்துக் கொண்டான்.

அவன்தோழனைப் பார்த்தான்.

தோழனும், அவனைப் பார்த்தான்.

அவன், தன் எலும்புக் கையை மெதுவாக இழுத்தான். தூக்கிக் கொண்டு போனன். ஆள்காட்டி விரலை நீட்டி இளித்த வாயின் குறுக்கே வைத்தான்.

பொருள்: சந்தடி செய்யாதே!

இதற்காக எத்தனை சிரமம்!

அதன் பின்—தலைக்கு அடியில் ஏதோ சுட்டிக் காட்டினான். தோழன் ஊகித்தறிந்து, தலை மாட்டின் அடியிலிருந்த ஒரு சிறு கடிதத்தை எடுத்தான். படித்தான்.

சின்னத்துரையின் சார்பில் கடிதம் பேசியது.

'...ஒரு காலத்தில் உன் காதலியாயிருந்தாள். என் அறியாமை, நான் அவளைக் கடிமணம் புரிந்தேன். சாகக் கிடக்கிறேன். செத்துப் போவேன். உறுதி. நீ சீர்திருத்தவாதி. மறுமலர்ச்சி விரும்பி. நம் நாட்டில் விதவைகள் இருக்கக் கூடாது. அவளை நீ ஏற்றுக்கொள். மறுக்கவேண்டாம். செல்லுபடிகானசுய தான்; ஆனாலும், தேயாத காசு. செல்லுபடியாகும்...'

தோழன் கண்ணீர் வடித்தான்.

அவன் மீண்டும் கண் மூடி, மரணத்தோடு போராடிக் கொண்டிருந்தான். தொண்டைப் பள்ளத்தில் அடைத்துக்கொண்ட கபத்தின் சப்தம் கொரகொரத்தது.

அவன் பிணமாவது நிச்சயம்.

தோழன் சிந்தித்தான்.

எல்லோருக்கும் நல்ல சுகமற்ற உறக்கம். மௌனம்! அமைதி! கோரம்!

தோழனின் சிந்தனைக்கு ஒரு முடிவு.

அவளையும் எழுப்பிக் கடிதத்தைக் காட்டினான்.

அவள் படித்தாள். விஷயம் தெரிந்ததும் 'ஓ...கோ!......' வெனக் கதறினாள்!

எல்லோரும் விழித்துக் கொண்டார்கள்.

குடிசையில் பரபரப்பு!

நேரம் புதைந்துகொண்டேயிருந்தது.

பொழுது விடிந்தது.

நோயாளி: டாக்டர், விறு விறுப்புத் தரக்கூடிய மருந்தாக எழுதிக்கொடுங்கள்.

டாக்டர்: கவலைப்படாதேயும். நான் எழுதியனுப்பும் பில் உமக்குக் கட்டாயம் விறுவிறுப்பைத் தரும்.

இன்னமும் அவன் சாகவில்லை!

காலை—பகல்—மாலை—இரவு—மீண்டும் — காலை — ஆக எவ்வளவோ நேரங்கள் உருண்டோடிப் போயின!

அவன் இன்னமும் சாகவில்லை!

சாகவே கிடந்தான்!

மூன்றும் நாள் காலை.

அவனுக்கு வியர்த்துக் கொட்டியது. மயக்கம்; தெளிவு; மீண்டும் மயக்கம். வியர்வை; மறுபடியும் தெளிவு.

அன்று மாலை.

சடலம் சிறிது வலுப்பெற்றது. உயிர் தேங்கி விட்டது. அப்படியும் இப்படியும் உருண்டான். புரண்டான். இப்படி ஓரிரண்டு நாட்கள்.

ஏழாம் நாள் காலை, அவன் பிழைத்துக்கொண்டான்!

காலம் உருண்டது.

ஒரு மாதத்திற்குப் பின் ஒரு நாள், சின்னத்துரை, குடிசைத் திண்ணையின் மீதமர்ந்து, பால் குடித்துக்கொண்டிருந்தான். அவன் அருகில் குங்குமப் பொட்டிட்டுத் திகழும் அழகு முகத்துடன் அவன் இளம் மனைவி ஒயிலாக நின்றிருந்தாள்.

ஒரு பையன் ஓடிவந்தான். சின்னத்துரையிடம் ஒரு கடிதத்தைக் கொடுத்துவிட்டு ஓடோடிப் போனான்.

சின்னத்துரை கடிதத்தைப் படித்தான்.

தோழனின் சார்பில் கடிதம் பேசியது.

"நான் வெளியூர் போகிறேன். என் மனைவியை ஏற்றுக்கொள்ளும்படி வேண்டுகிறேன்..."

சின்னத்துரை சிரித்தான்.

சிரிப்புக்குக் காரணம்?...

அவளுக்கு விளங்கவில்லை.

"என்ன கடிதம்?......யார் எழுதியது?......"

அவன், அவளை ஏறிட்டு நோக்கினான். ஒரு நமட்டுச் சிரிப்பு!

விஷயம் விளக்கப்படவில்லை.

ஆனுலகத்தின் கைப்பாவையாய்க் கிடந்துழலும் அவள் விழித்தாள். மீண்டும் கேட்கவில்லை; துருவிக் கேட்கத் திறமற்ற மக்கு! பேசாமல் உள்ளே சென்றாள்!

அன்பின் எல்லை

தமிழ்த்தும்பி

பல் கிட்டும் குளிர். வாடைக் காற்று வேறு 'விர்விர்' என்று சுழன்றடித்தது. இருக்கும் குளிரை அதிகமாக்கிக் கொண்டிருந்தது அவ்வாடை. போதும் போதாததற்கு மழையும் அவற்றோடு சேர்ந்து கொண்டது. குளிருக்குச் சொல்லவா வேண்டும்? நகரங்களிலும், மக்கள் வசிக்கும் ஊர்களிலும் நல்ல பாதையாவது இருக்கும். போர்க்களத்தில் என்ன இருக்கும்? ஒரே மண்ணும் புழுதியும் தான். போர் வீரரும், தளபதியும், பாண்டிய மன்னனும்தான் போர்க்களத்தில் பாசறை அமைத்துக் கொண்டு இருந்தனர். போர்க்களத்தின் கோரத்தைக் குளிரும், வாடையும் மழையும் இன்னும் கோரமாக்கிக் கொண்டிருந்தன.

பாசறையில் அமர்ந்திருந்தான் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியன் என்னும் பாண்டியன். அவனைச் சூழ்ந்து போர்த் தளபதிகளும், படைவீரர்களும் இருந்தனர். நெடுஞ்செழியனுக்குத் தூக்கம் வர மறுத்தது. தளபதியும், தலைவர்களும் தன்னைச் சுற்றிக் கொண்டதால் அல்ல; வேண்டுமென்றால் அவன் அவர்களை அவரவரிடத்துக்குச் செல்லுமாறு பணித்திருக்கலாம். வாடைக் காற்றின் தொந்தரவும் பாண்டியன் தூக்கமின்மைக்குக் காரணமல்ல; தான் தங்கின பாசறையை வாடை வருத்தாது பார்த்துக் கொள்ளுக என்று அவன் வாய் திறந்திருந்தால், அவன் படை அதை உறுதியாக நிறைவேற்றியிருக்கும். மழை பெய்வதும் அவன் தூக்கம் கொள்ளாததற்குக் காரணமன்று; ஏனெனில் அவன் தங்கின பாடிவீடு மழை ஒன்றும் செய்யாதபடி அமைக்கப்பட்டிருந்தது, ஏற்கனவே இதை எதிர்பார்த்த போர்ப்படைகளால். தன் தேவியின் நினைவு அவன் உள்ளத்தை வாட்டுகிறதா? அதுவுமில்லை. அவன் எண்ணம் முழுதும் போர்க்களத்தில் ஈடுபட்டிருந்தது. ஆகையால் தன் தேவியை நினைக்க அவனுக்கு நேரமில்லை. போர்க்களத்தில் தோல்வியடைந்துவிட்டோமே என்ற கவலையோ, எப்படி வெற்றியடைவது என்ற சிந்தனையோ அவன் மனதை அலைக்கழிக்கவில்லை. அவன் நினைவு முழுதும் போரில் பங்கெடுத்து வீரத்தைக் காட்டின போர்வீரர்களிடம் சென்றிருந்தது. அவர்களைப் பார்த்து நேரில் பேசி வரவேண்டும் என்ற ஆசையே அவன் மனதைப் பற்றிக்கொண்டது. அவர்களைப் பாராட்டி உபசரிப்பது தன் மாறுக்கடமை என்பதே

அவன் நம்பிக்கை. ஆகவே, அவர்களை ஊக்குவிக்க இரவோடு இரவாகப் போர்க்களம் செல்ல முடிவு கட்டினான் பாண்டியன். இந்த அவாவே அவனிடமிருந்து தூக்கத்தைத் தொலை தூரத்துக்கு விரட்டிவிட்டது.

சேனாதிபதியோடு போர்க்களத்துக்குப் பாண்டிய மன்னன் புறப்பட்டான். அவனை மழைக் கொடுமையிலிருந்து காப்பாற்ற அவன் வீரர்கள் அவனுக்கு வெண்கொற்றக்குடை பிடித்தனர். சட்டத்தே நூலால் கட்டின முத்துமாலையை உடையதாய் இருந்தது அக்கொற்றக் குடை. 'தவ்'வென்ற ஓசையை யெழுப்பி மழைத்துளிகள் குடையின்மேல் விழுந்தன. அடிக்கும் சாரலால் துளிகள் கண்டபடி குடைமேல் விழுந்தன. ஒருவேளை பாண்டியன் பொன்னுடலைத் தீண்ட மழைத்துளிகள் ஆசை கொண்டனவோ, என்னவோ? வீரர்கள் அன்பின் மிகுதியால் ஒரு துளியும் மன்னன்மீது விழாது காத்தனர். இரவின் இருட்டைப் போக்கி ஒளியைப் பரப்பப் பல பருத்த சுடர்களைக் கொண்ட விளக்கையேந்தி வந்தனர் சில வீரர்கள். வாடைக் காற்று வட திசையிலிருந்து அடித்ததால் கொழுந்து விட்டெரிந்த பெருஞ்சுடர்கள் தெற்கு நோக்கிச் சாய்ந்து எரிந்தன. தென்புறஞ் சாய்ந்த பருத்த கொழுந்துகளைக் கொண்ட சுடரொளியில் பாண்டியன் இரணகளத்தைப் பார்வையிடலானான்.



வேப்பந்தாரைத் தலையிலே கட்டின வலிய காம்பினையுடைய வேலையேந்தி சேனாதிபதி முன்னால் சென்றான். அவனைத்

. . .

தொடர்ந்து பாண்டியன் சென்றான். புண்பட்ட வீரரை ஒவ்வொருவராக மன்னருக்குக் காட்டலானான் தளபதி. அவர்கள் ஒவ்வொருவரையும் தட்டிக்கொடுத்து அவர்தம் வீரத்தைப் பாராட்டி ஆறுதல் மொழி சொல்லிக்கொண்டே வந்தான் நெடுஞ்செழியன். காயம் பட்ட எல்லோரையும் ஒருவர் விடாது பார்த்து ஆறுதல் சொன்னான் பாண்டியன். ஒரு வீரன் காயம்பட்டு நிலத்தில் சாய்ந்திருந்தான். அந்த நிலையிலும் வாளைத் தோளிலே தாங்கி வீரப் பார்வை பார்த்த அந்த வீரனைத் தட்டிக்கொடுக்கக் கீழே குனிந்தான் பாண்டியன். குனியும்போது இடது தோளினின்றும் மேலாடை நழுவிக் கீழே விழ இருந்தது. நழுவின ஆடையை இடது அக்குளில் அணைத்துக் கொண்டு, அவ்வீரன் தோளிலே வலது கையை வைத்துத் தட்டிக் கொடுத்தான் பாண்டியன்.

திடீரென்று அவன் ஆடை மேலும், உடல் மேலும் மழைத் துளிகள் பட்டன. வெண் கொற்றக் குடை சரியான நிலையில் பிடிக்கப்பட்டிருந்தும், துளி அவன் மீது விழுந்தது, குடை பிடித்த வீரர்களுக்கு அதிசயமாக இருந்தது! தூய மழைத் துளி விழுந்திருந்தாலும் பரவாயில்லை. சேறு கலந்து தூய்மை கெட்ட துளி பாண்டியன் உடம்பை மாசு படுத்திற்று. மேலாடை சேறாகமலிருக்கத்தான் மன்னன் அதை இடது அக்குளில் அழுத்திக்கொண்டான். அப்படியிருக்க மேலாடை மாத்திரமல்லாது உடம்பும் கெட்டுப்போனால் அவனுக்கு எப்படிக் கோபம் வராமலிருக்கும்? வீரர்களெல்லாம் பயந்தனர், தம் அன்பால் அவரைக் காக்க இயலவில்லையே என்று. கோபம் வந்து என்ன சொல்லுவாரோ என்று அவர்கள் அஞ்சினர்.



சுற்றுமுற்றும் பார்த்த நெடுஞ்செழியனுக்குக் கோபம் வரவில்லை. மாறாக அவன் முகத்தில் புன்னகை தவழ்ந்தது. வீரர்களுக்கு ஒரே ஆறுதலாயிருந்தது! பாண்டியன் நோக்கின திக்கை அவர்களும் நோக்கினர். அவர்கள் கண்ட காட்சி அவர்களுக்கு வியப்பைத் தந்தது. பாயும் குதிரையும், பெரிய அடியினை கொண்ட யானைகளும் பாண்டிய மன்னனை நோக்கி விரைந்து வந்தன. அவற்றை நடத்திவர ஆட்களோ பாகனோ இல்லை. தம் போக்கில் அது வந்தன. மழையாலும், வாடையாலும் போர்க்கள மண்ணும் தூசியும் சேறு சகதியுமாகிவிட்டிருந்தன. அதில் பாய்ந்தும், ஓடியும் அவை வந்ததால் சேற்றுத்துளிகள் சுற்றிலும் தெறித்தன. பாண்டியனைக் கண்ட மகிழ்ச்சியால் குதிரை கனைத்தது: யானை பிளிறிற்று. இன்பவெறியை வெளிப்படுத்த யானையும், குதிரையும் இலேசாக உதறின. அந்த உதறல் துளிகளில் சிலதான் பாண்டியன் ஆடையையும் உடம்பையும் சிதைத்தன. அத்துளிகள் குளிரால் உதறினதால் ஏற்பட்டனவல்ல! ஏனென்றால் குளிருக்கு உதறியிருந்தால் இன்னும் அநேக சேற்றுத் துளிகள் தெறித்திருக்கும்! அதோடல்லாமல், அவற்றின் உடல்களில் இன்னும் மழைநீர் அருவி போல ஓடிக்கொண்டிருந்தது!

குடைபிடித்த வீரர் பாண்டியன்மீது ஒரு மழை துளியும் விழாதவாறு பாதுகாத்து தம் அன்பின் மிகுதியை வெளிபடுத்தினர். ஐந்தறிவுகொண்ட நாற்கால்பிராணிகளான யானையும் குதிரையும் சேற்றுத் துளிகளை மன்னன் மீது தெளித்து தம் அன்பை வெளிப்படுத்தின! பாண்டியன்மீது தமக்குள்ள அன்பை ஒருவரும் நடத்திச்செல்லாது, தாமாக வந்து, அவனைப் பார்த்துத் தெரிவிப்பதென்றால், அவற்றிற்கு மன்னன் மீது எத்துணை அன்பும், அறிமுகமும் இருக்கவேண்டும்? அப்படி இருக்கவேண்டுமென்றால் நெடுஞ்செழியன் அவற்றை எத்

கவி தாகூர், தனக்கு மாதிரிக்கு அனுப்பப்பட்ட எல்லாப் பொருள்களுக்கும் நற்சான்றுகள் வழங்கினார்.

ஒருநாள், அவருடைய காரியதரிசி அவரிடம் "ஸார், நீங்கள் எடுத்ததற்கெல்லாம் இம்மாதிரி நற்சாட்சிப்பத்திரங்கள் கொடுத்துக்கொண்டே போனால், பின் உலகில் தோன்றும் ஒவ்வொரு பொருளுக்கும்கூடக் கொடுத்தாகவேண்டியதுதானா?......" என்றார்.

அமைதியாகக் கேட்டுக்கொண்டிருந்த பிறகு, தாகூர் "நீங்கள் சொல்லுவது தவறு. நான் ஒருபோதும் நற்சாட்சிப்பத்திரம் கொடுக்கமுடியாத பொருள் ஒன்றும் இருக்கிறது" என்றார்.

காரியதரிசி ஆச்சரியப்பட்டவராக, அந்தப் பொருள் என்ன என்று வினவினார்.

"க்ஷவரக்கத்திகள்!"

தனை முறை நாள் தவருது பார்த்திருக்க வேண்டும்? "தான் வேறு, படை வேறு; படைவேள் மக்கள் வேறு; மாக்கள் களூறு" என்ற குறுகிய எண்ணமில்லாது, பாண்டியனுக்கு எவ்வளவு பரந்த நோக்கம் இருந்திருக்கவேண்டும்?

இப்பொழுது விவரித்தது நெடுநல்வாடைக் காட்சிகளுள் ஒன்று. இதன் ஆசிரியர் நக்கீரர் ஆவர். மேற்சொன்ன நிகழ்ச்சியில் எவ்வளவு ஆழமான கற்பனை இருக்கிறது! இயற்கையில் அன்பின் முழுமையை அவர் எப்படி விவரிக்கிருர்! எவ்வளவு கூரிய பார்வை அவருடையது! வடக்குக் காற்ருல் சுடர் தெற்கு நோக்கிச் சாய்கிறது என்று அவர் எத்தனை உண்மையாகச் சொல்கிருர்! போர்க்கள நிகழ்ச்சி மனிதனுக்கும், பிராணிக்கும் உள்ள தொடர்பை எவ்வளவு அருமையாகச் சித்தரிக்கிறது!

பாண்டில் விளக்கிற் பருஉச் சுட ரழல
வேம்பு தலையாத்த நோன் காழெஃகமொடு
முன்னோன் முறைமுறை காட்ட ப பின்னர்
மணி புறத்திட்ட மாத்தாட் பிடியொடு
பருமங் களையாப் பாய் பரிக் கலிமா
இருஞ் சேற்றுத் தெருவின் எறிதுளி விதிர்ப்பப்
புடை வீழந்துகி' லி-வயின் தழீஇ
வாள்தோட் கோத்த வனகட் காளை
சுவல் மிசை யமைதத கையன் முகன்மர்ந்து
நூல் கால் யாத்த மாலை வெண் குடை
தவ் வெனறைசைஇத் தாதுளி மறைப்ப
நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்

—நெடுநல்வாடை

[பாண்டில்-பலகால்; பருஉச் சுடர்-பருத்த சுடர்; நோன் காழ்-வலிய காம்பு; எஃகம்-வேல்; விதிர்ப்ப-நடுங்க; வீழ் அம் துகில்-விழும் அழகிய துணி; தழீஇ-அணைத்து; சுவல்-தோள்; தாதுளி-பரக்கும் துளி.]

பொன்னி வெளியீடு—5

கம்பன் கெடுத்த காவியம்

மு. அண்ணமலை

'அனுமன் தூதஞ?', 'கம்பனின் மனேதத்துவம்' போன்ற தனி அத்தியாயங்களில் ஆராய்ச்சிக்கண் கொண்டு உகந்த மேற்கோள்களுடன் ஆராய்ந்திருக்கிருர். ஆசிரியர். கம்ப ராமாயணத்திலே கண்டனத்துக்குரிய பகுதிகள் பலப் பல உண்டு என்பதை அனைவரும் உணர்ந்துகொள்ளவேண்டுமென்பதற்காகவே இப்புத்தகத்தினை மிகவும் குறைந்த விலையில் அழகிய பதிப்பாகக் கொணர்ந்திருக்கின்ருேம்!

விலை அணு 4

வணிகர்கட்குக் கழிவு தரப்படும். முன்பணம் அனுப்புவோர்க்கும், ரூ. 5-க்கு மேற்பட்டு வாங்குபவர்கட்கும் அனுப்பும் செலவு இலவசம். வி. பி. பி. செலவு தனி. தனிப்பிரதி வேண்டுவோர் ஐந்தணு தபால் தலை அனுப்பவேண்டும்.

பொன்னி லிமிடெட்—சென்னை—21

அழகெல்லாம்

திருவிழியில் ஒளிபொங்கச் சிரிப்பாய்! உள்ளம்
தித்திக்க மொழிபேசிக் களிக்க வைப்பாய்!
கருவிழியாம் வாள்வீசிக் கண்டோர் தம்மைக்
கருத்தழியச் செய்திடுவாய்! வளைகுலுங்கத்
தெருவழியே அன்னம்போல் நடப்பாய்! காணத்
தெளிவிழப்பேன்; செயல்மறப்பேன்; இன்றோ உன்றன்
உருவழிந்து போனதடி! உருக்குப் பொன்னின்
ஓவியமே! உன்னெழிலை எங்கொளித்தாய்?

பள்ளிவிடு நேரத்தில் வந்து பார்ப்பேன்,
பாவையரின் குழுவில்பே ரரசி போலத்
துள்ளுகின்ற நடை போட்டு மானினத்தைத்
தோற்கடிப்பாய்; தோகையின் எழிலைக் காணக்
கள்ளுண்ட வெறியனென ஆவேன்; கொவ்வைக்
கனியிதழின் சுவைகாணத் துடிப்பேன்; இன்றோ,
எள்ளுகின்ற நிலையேற்றாய்; உடலிளைத்தாய்;
எந்திழையே! எழிலெல்லாம் எங்கொளித்தாய்?

எங்கொளித்தாய்

வானுலவும் முழுநிலவு வந்தே உன்றன்
மாசில்லா முகத்துலவும்; தெவிட்டா இன்பத்
தேனுலவும் இதழ்விரிய ஒளிரும் முத்தில
திருவெல்லாம் நின்றுலவும்; நடையில் வல்ல
கானுலவும் மடப்பிடியே! கனிபிழிந்த
கற்கண்டின் மொழியாளே! கரும்பே! இப்போ(து)
எனிலவு முகம்வெளுத்துக் காணு கின்றாய்?
வந்திழையே! எழிலெல்லாம் எங்கொளித்தாய்?

குயில்நாணும் குரலெங்கே? கொவ்வைச் செவ்வாய்,
கொடியுடலும், குளிர்முகமும் எங்கே? காட்டு
மயில்நாணும் நற்சாயல் எங்கே? கொண்டல்
மருண்டோடும் குழலெல்லாம் எங்கே? எங்கே?
கயல்நாணும் கருவிழிகள் கண்டே நாணும்
கைவேலும் கூர்வாளும் அந்நாள்! இன்றோ,
அயல்காணும் போதுள்ளம் இரங்குகின்றேன்;
ஆரணங்கே! அழகெல்லாம் எங்கொளித்தாய்?

—பா. முத்து



2

கண்மணியும், சிவஞானமும் ஒட்டப்பிடாரம் கிராமத்தின் எல்லைக்கோடியிலுள்ள ஆவாரங் காட்டிற்குள் வந்தார்கள். ஆவாரங்காட்டின் நடுவில் உள்ள கும்பினியான் கூடாரத்தருகே வந்தார்கள்; பார்த்தார்கள்.

ஏழெட்டுக் கூடாரங்கள் இருளிலே, பனியிலே அமிழ்ந்து கிடந்தன. மூலைக்கு மூலை லாந்தர் விளக்குகள் குளிர்காற்றிலே ஆடி அசைந்துகொண்டிருந்தன. அங்குமிங்குமாக ஓரிரண்டு பாராக்காரர்கள் துப்பாக்கிகளைத் தூக்கிக்கொண்டு குடிவெறியில் தள்ளாடித் தள்ளாடிப் பாராக்குப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். கூடாரத்தின் தென் திசைக் கோடியிலே நிற்கவைக்கப்பட்டிருந்த நாலைந்து பேய் வாய்ப் பீரங்கிகளை இரண்டு சோல்ஜர்கள் நன்றாகக் குடித்துவிட்டு அலங்கோலமாய் விழுந்தபடி, மிக மிக உஷாராகப் பாராக்குப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

கண்மணியும், சிவஞானமும் தங்களுக்குள் ஏதோ 'கசமுச' பாஷையில பேசிக்'கொண்டு பீரங்கிகள் வைத்திருக்கும் இடத்தை நோக்கித் தரையோடு தரையாகக் குனிந்து பதுங்கிச் சென்றார்கள்.

சில நிமிஷங்களுக்குப் பின்—

கண்மணியும், சிவஞானமும் தரையோடு படுத்து மெல்ல மெல்ல ஊர்ந்து சென்று, பீரங்கிகளின் பக்கத்தில் விழுந்து தன்னை மறந்து குறட்டை

விட்டுத் தூங்கிக்கொண்டிருந்த ஓர் ஐரோப்பிய சோல்ஜரின் இடையிலிருந்த பட்டாக்கத்தியை மிகவும் உஷாராக உருவி எடுத்தாள் கண்மணி. சிவஞானம், அவன் தோளிலிருந்த துப்பாக்கியை எடுத்தான்.

கண்மணி பட்டாக்கத்தியை கொ... கையில் பிடித்துக் பார்த்து "... சிவஞானத்தைப் "உம்!" என்று..." என்றாள்.

'சரக்!'—ஒரே வெ...னம். ஐரோப்பிய சோல்ஜரில் ...ந்த வேறு, உடல் வேறாகித் துடிதுப் பதைத்து ஓய்ந்தது!

அப்புறம்—இன்னொரு பக்கத்தில் விழுந்து கிடந்த வெள்ளைக்கார சோல்ஜரின் தலையை ஒரே வெட்டில் சீவித் தள்ளினாள், வீரக் கண்மணி. அதன் பிறகு—

கண்மணியும், சிவஞானமும் சந்தடி செய்யாமல் அங்கிருந்த பீரங்கிகளின் வாயிலே மண்ணை வாரிக்கொட்டிக் கெடுத்தார்கள். அதன் பின், வெட்டிச் சாய்த்த சோல்ஜர்களின் தலைகளை ஆளுக்கு ஒன்றாக எடுத்துக் கொண்டார்கள். கூடாரத்திற்குக் கொஞ்ச தூரத்தில் போய் நின்று, நிதானித்து, சிவஞானம் தேட்டை போட்டுக்கொண்டு வந்த வெடிகுண்டுகளைக் கூடாரத்தை நோக்கிக 'கபகப' வென்று வீசியெறிந்தார்கள்.

குண்டுகள் பறந்தன! கூடாரங்களின் மீதுபோய் விழுந்தன! விழுந்ததும் 'டமால்! டுமால்! குகும்ம்ம்!...' என்று வெடித்துச் சிதறிக் கரும்புகையைக் கக்கின! இந்தத் திடீர்த் தாக்குதலால் ஏறக்குறைய ஐம்பது கும்பினியார்கள் மண்டை நொறுங்கி, குடல் கிழிந்து கூளமாய் மாண்டொழிந்தார்கள்! அதற்குப் பின் விழித்தெழுந்து துப்பாக்கிகளைத் தூக்கிக்கொண்டு ஓடோடியும் வந்த கும்பினியான்கள், வெடிகுண்டு பறந்துவரும் திசையை நோக்கிப் பலதடவை சுட்டார்கள்; சுட்டுக்கொண்டே இருந்தார்கள்! பலன்?...

அதோ!... பச்சை ரத்தம் ...ட்டும் பரங்கிப் படுபாவி...மும் ப... தலைகளைத் தூக்கிக் களோ கோ...மணியும் சிவஞான கண்மணியும்...ங்தோடுகிறார் குருதி கொட்டும் நோக்கி! தலைகளை எடுத்துப்ம்பாய்,...மும் நள்ளிரவிலே தூங்கிக்கொண்டிருந்த ஊமைத்துரையை எழுப்பி, அவர் காலடியிலே காணிக்கையாகச் செலுத்தி வணங்கினார்கள்.

ஊமைத் துரையின் உள்ளம் குளிர்ந்தது! கண்மணி, சிவஞானம்—இருவரின் சூரத்தனத்தைக் கண்ட ஊமைத்துரை உயிர் மயங்கிச் சொக்கிச் சிலையாக நின்றார். அவர் கண்களிலிருந்து இரண்டு துளிக் கண்ணீர் சொட்டியது!

★

பொழுது விடிந்தது!

ஊரிலுள்ள மக்களையெல்லாம் கோட்டைக்குள் வந்து தங்கும்

படி ஊமைத்துரை பறை சாற்றினார். அதன்படியே மக்களெல்லாம் குழந்தை குட்டிகள் அனைவரையும் அழைத்துக்கொண்டு கோட்டைக்குள் போய் அடைக்கலம் புகுந்துகொண்டிருந்தார்கள். கண்மணியின் அம்மாவும் ஆயத்தமாகிக் கொண்டிருந்தாள். ஆனால் கண்மணி மட்டும் "நான் கோட்டைக்குள் வந்து அடைபட்டிருக்கமாட்டேன். என் ஆத்திரம் தீரும் வரைக்கும் வெட்டிக் குவிக்கப் போகிறேன். நான் வெளியேதான் உலாவிக்கொண்டிருப்பேன்!" என்று ஒரே பி ... வாதமாக இருந்தாள். ...கள்!"

"கண்மணி! கும்பி...த் தந்திர ரத்தவெறி பிடி... முயல்குட்டி

"அந்தத்ா! நீங்கள் கவலைப் மாய்க்ள். நான் அடிக்கடி ...ட்டைக்குள் வந்து உங்களைச் சந்திக்கிறேன்!..."

"கண்மணி!..."

"அழாதீர்கள் அம்மா. உங்களைக் கோட்டை வரைக்கும் கொண்டுவந்து விட்டு வருகிறேன்"—கண்மணி, அம்மாவை அழைத்துக் கொண்டுபோய்க் கோட்டைக்குள் விட்டுவிட்டு, மறுபடியும் தன் வீட்டில் வாசல் திண்ணையில் அமர்ந்த எங்கேயோ ஊர்சுற்றப்... பார்த்கும் சிவஞானத்...ள். சற்று துக் கொண்... சிவஞானமும் நோத்தி...டைசியில் ஓர் அரை வந்...ரங்கழித்து ஏதோ ஒரு ...டத்துடன் ஒட்டப் பிடாரத்திலுள்ள கும்பினியான் கூடாரங்களை நோக்கி விரைவாக நடந்தார்கள்.

"கண்மணி, நம்முடைய திட்டத்தில் தினையளவு பிசகினாலும் கூட..."

"நம்மிருவரின் உயிரையும் எமலோகத்திற்கு அனுப்பிவிடுவார்கள் அந்தக் கும்பினிப் பிசாசுகள்..அவ்வளவுதானே?..."

"உயிரைவிட மேலான உரிமையே பறிபோகும்போது, உயிர் என்ன, வெல்லமா? அதற்காகச் சொல்ல..."—சிவஞானம் வார்த்தையை இழுத்து முடிபோடுவதற்குள் 'டுமீல்!' என்று ஒரு வேட்டு அதிர்ந்தது!

அடுத்த விநாடி?

"அம்மா!" என்று வீறிட்டு அலறி, துப்பாக்கிக் குண்டு பாய்ந்த விலாப்புறத்தை இரு கைகளாலும் இறுகப் பிடித்துக் கொண்டே மண்ணில் சாய்ந்து துடியாய்த் துடித்தான் சிவஞானம்.

இந்தத் திடீர்த் தாக்குதலைக் கண்டு கும்பி நடுங்கிய கண்மணி "ஐயோ! சிவஞானம்!..." எனக் கூவிக் கதறிச் சிவஞானத்தின் மேல் விழுந்த அதே சமயத்தில் இன்னொரு குண்டு, அவள் கழுத்தில் புதைந்தது! "அம்மா!"... எனக்கிரீச்சிட்டாள் கண்மணி.

அதன் பின்—

குரூரமான இந்த வெயில் நேரத்திலே கும்பினிப் பூதங்கள் கோட்டையைத் தாக்க ஆரம்பித்தன.

'குகுகும்ம்ம்!...டுடுடும்பம்'—வெண்ணீலப் புகை மூச்சுப் பீச்சியடிக்க, செந்தீ எச்சிலைக் காரியுமிழ்ந்து வெகு பயங்கரமாய் உருும ஆரம்பித்தன பேய் வாய்ப் பீரங்கிகள்!

பயங்கரப் பீரங்கிகளின் குரூரமான இடைவிடாத 'தாக்குதல்களைச் சமாளிக்க முடியாமல், பீரங்கிக் குறிகளுக்கு இலக்கான எட்டே நாட்களில் கட்டி முடித்த, அதோ!......அந்தக் கோட்டைகள் இடிந்து, தகர்ந்து, நொறுங்கி விழுந்து நாசமாயின! அந்தோ!...

பெண்கள் முன்னேற்றம்

சுலோசனா

"நீங்கள் கூறுவதில் உண்மை இருக்கிறது. பலதரப்பட்ட முகங்களுக்குப் பலதரப்பட்ட சட்டைகள். முகங்களின் வடிவங்கள் எத்தனையோ ரகங்கள்! அவைகளுக்குப் பொருந்தியவைகளாயிருந்தால் எவ்வளவோ நல்லது. முகங்களின் வடிவங்களுக்கேற்றபடி சட்டைகளின் கழுத்து வடிவமும் அமைந்திருக்கவேண்டும். வட்டவடிவம், சதுர வடிவம், V வடிவம், இன்னும் என்னென்னவோ வடிவங்கள்!"

"அது மட்டுமல்ல...பழம் நாகரிகத்திற்குள் புகுந்து சென்ற சுருந்தலை உடையை நமது பெண்கள் அறிமுகம் செய்யாமலிருக்க வேண்டுமென்பதே என் பிரார்த்தனை!"

சாசு சிரித்தாள். கமலியோடு பேசிக்கொண்டிருப்பது அவளுக்கு மிகவும் ஆனந்தமாயிருந்தது.

"வெள்ளைக்காரப் பெண்கள் சுருந்தலை உடையைப் பின்பற்றிவிட்டார்களென்று நினைக்கிறேன்?" என்றாள் அவள்.

"அவர்கள் எப்படியோ போகட்டும்; நமது பெண்களின் நாகரிகத்தைப் பற்றித்தானே இங்கே பேச்சு. ஆனால் எவை நல்லவைகளோ, அவைகளை வெள்ளைக்காரப் பெண்களிடமிருந்து கற்றுக்கொள்வதில் தவறில்லை!" என்றாள் கமலி.

சாசு அதை ஒப்புக்கொண்டாள். அதோடு, தன்னைச் சங்கத்திற்கு அழைத்து வந்த பார்வதியை மனதார வாழ்த்திக்கொண்டாள்!

3

சங்கத்தில் சேர்ந்த இரண்டாவது வாரம் வேறு பல புதுப் பெண்களைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது சாசுவிற்கு. ஹாலில் போடப்பட்டிருந்த பெரிய வட்ட மேஜையைச் சூழ உட்கார்ந்துகொண்ட பெண்கள், முந்திய வாரம் ஆரம்பித்து வைக்கப்பட்ட உரையாடலை மீண்டும் தொடர்ந்தனர். உரையாடல் மாத்திரமல்ல; அவர்களுடைய கைகள் வேலை செய்துகொண்டுமிருந்தன. மேஜைமீது பலதரப்பட்ட தையல்களும், மற்றும் பலகை வேலைகளும் சிதறிக் கிடந்தன.

"பெண்கள் எதற்காக உடை அணிந்துகொள்கின்றனர் என்ற ஒரு கேள்வி முந்தை நாள் எங்கள் பள்ளிக்கூட மாணவிகள் இடையே எழும்பியது. ஒருவரேனும் சரியான பதிலளிக்க

வில்லை!" என்று ஆரம்பித்தாள் லீலா. அங்கு கூடியிருந்த பெண்களில் சிறியவள் அவள். துடுக்குக்காரப் பெண். அவளது ஆரம்பப் பேச்சு சாசுவின் முகத்தைச் சிவக்க வைத்தது. லீலாவைக் கோபமாகப் பார்த்தாள். ஆனால் லீலா அவளைக் கவனிக்கவில்லை. அவளது வெட்டும் விழிகள், குறும்புப் பார்வையோடு கூடியிருந்த பெண்களை ஆராய்ந்துகொண்டிருந்தன.

"லீலா, நல்ல கேள்வியடி! பள்ளிக்கூடப் பெண்களின் பேச்சைப் பார்!" என்றாள் பார்வதி புன்னகையுடன்.

"இதில் தவறென்ன இருக்கிறது? கேள்வியைக் கிண்டல் செய்யாமல் பதில் சொல்லுங்கள். உங்களுக்குத் தெரிந்திருந்தால் கிண்டல் செய்யமாட்டீர்கள்!" என்றாள் லீலா நகைத்தவாறே.

"பெண்கள் எதற்காக உடையணிகிறார்கள்!" என்று முணுமுணுத்தாள் சாசு மனதிற்குள். "உனது கேள்விக்குப் பதில் அளிக்க வெட்கமாயிருக்கிறது. நீதானே பதிலையும் சொல்லித் தொலையேன்" என்றாள் லீலாவின் அருகிலிருந்த ரங்கம்மா.

"ஆண்களுடைய மனதைக் கவர்வதற்கே பெண்கள் விதவிதமான உடையணிகின்றனர் என்பது சிலருடைய தவறான அபிப்பிராயம்! அதுதான் இல்லை. மற்ற பெண்களின் மனதை எரியச் செய்வதற்கே பெண்கள் அவ்வாறு உடையணிகின்றனர்" என்றாள் லீலா.

ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர் அங்கிருந்தவர்கள்.

"எனக்குப் புரியவில்லையே. விளக்கமாகச் சொல்!" என்று கேட்டுக்கொண்டாள் ரங்கம்மா.

"ஒரு பெண் மற்றொருத்தியின் கண்ணை மயக்கவே நவநாகரிக உடையணிகிறாள்! பார்த்துக்கொள்; 'உன் 'ஸாரி'யை விட என் 'ஸாரி' தானே அழகாயிருக்கிறது!' என்று பெருமை எண்ணமிட்டுக் கொண்டு 'ஸ்டைல்'லாக மின்வெட்டுப் பார்வை பார்க்கலாமல்லவா? எப்பொழுதுமே பெண்கள் கொஞ்சம் பொறாமை உணர்ச்சி கொண்டவர்கள். ஒருத்தி நன்றாக உடை அணிவதும், விதவிதமான அலங்காரம் செய்வதும் மற்றொருத்திரு மனதை எரியச் செய்து கொண்டிருக்கும்! இந்த எரிச்சல்தான் பெண்களின் 'பாஷனை'ப்பொழுதொரு மாதிரியாக மாற்றிக்கொண்டிருக்கிறதென்பது என் அபிப்பிராயம்!"

"இந்த 'பாஷன்' எவ்விதம் ஆரம்பிக்கின்றது என்பதன் மர்மத்தை உடைத்துக் காட்டியவள் லீலா ஒருத்திதான் போலிருக்கிறதே!" என்றாள் அப்போது அங்கே தோன்றிய ரமா.

"தாங்க்ஸ்! உங்களது புகழுரைக்கு என் நன்றி!" என்று கூறி லீலா சிரித்தாள்.

"ஆண்களின் மனதைக் கவர்வதற்கானால் இந்த 'பாஷன்'

மாறிமாறி வராதென்று சொல்கிறாய்?"-இது சரசுவின் கேள்வி.

"உண்மைதானே! ஆண்களின் மனதைக் கவர்வது மிகவும் சுலபமாயிற்றே. இரகசியம் இது தான்; பகட்டும் சலரில் புடவையும் ஜாக்கட்டும் அணிந்து கொள்ளவேண்டும். ஒரே 'யூனிபாரமா'க இருந்தால் மிக வும் நல்லது. ஜாக்கட் எந்த 'பாஷனா'க இருந்தாலும் பரவா யில்லை! பௌடர் பூச மறந்து விடக் கூடாது. கூடுமானால் இரட்டைப் பின்னல் பின்னி அதே கலரில் இரண்டு ரிப்பன் கட்டிக்கொள்வது நல்லது. அதே கலரில் கைவளையல்கள்; லோலக்குகள்! லோலக்கின் கல் லின் தரத்தைத்தான் சொல் கிறேன்! லோலக்குப் பித்தளையா யிருந்தாலும் பரவாயில்லை — பொன் பூசிக்கொண்டால் போச்சு! ஆண்கள் அதையெல் லாம் கூர்ந்து பார்க்கும் வழக்க மில்லையே! மேல் வேடத்தைத் தானே அவர்கள் அதிகமாக விரும்புவார்கள். பௌடர் சீக் கிரத்தில் அழிந்து போகாம லிருக்கச் சிறிது 'கிரீம்' தடவிக் கொண்டால் பலே ஜோர்தான்! மை தீட்டிக்கொள்ளலாம். வித விதமான நிறங்களில் மலர் சூடிக்கொள்ள மறந்துவிடக் கூடாது. 'லிப்ஸ்டிக்' பூசுவதை நான் கட்டாயப் படுத்தமாட் டேன்! லேசாகப் பூசிக்கொள் வது ஒருவிதத்தில் கவர்ச்சி தான். எனினும் நம் பெண் களுக்கு அதுதேவையில்லை என் பது என் எண்ணம்! காலணு வட்டத்தில் பொட்டிடாமல் சிறியதாக ஒரு பொட்டிடுவது அழகு. கையில் ஒரு 'வானிட்டி பாக்!...பிறகு குதிகால் தூக்கி நிற்கும் செருப்புகள்...!"

"குதிகால் தூக்கி நிற்கும் செருப்பு அணிந்துகொள்வது நல்லதல்லவாம். கால் அதனால் மிகவும் பாதிக்கப்படுமாம்..." என்று குறுக்கே ஒரு வார்த்தை போட்டு வைத்தாள் சரசு. "ஆமாம். 'சயன்ஸ்' பிர காரம் நல்லதல்லதான். ஆனால் நாகரிகத்தின் பிரகாரம் அது தானே அழகாகக் கருதப்படு கிறது? மேல்நாட்டுப் பெண்கள் 'ஹை ஹீல்ஸ் ஷூ' இல்லாது நடக்கின்றார்களா என்ன? அது வன்றோ அவர்கள் கால்களுக்கு அழகான வடிவத்தைக் கொடுக் கிறதாம்!" என்றாள் கமலி.

"அப்படித்தான் சொல்கிறார் கள். 'ஹை ஹீல்ஸ் ஷூ' பெண்களின் கால்களை அழகு படுத்துகிறதாம்!" என்றாள் ரங்கம்மா.

"மேல்நாட்டுப் பெண்கள் 'பிராக்' (Frock) அணிகிறார் கள். அதனாலே அவர்கள் கால் களும் அழகாக இருந்தால்தானே கவர்ச்சி! கால் விரல்கள்கூட வெளியே தெரியாமல் அழகாகப் புடவை அணியும் நமது கால் களுக்குக் கவர்ச்சி வேண்டிய தில்லையே!" என்றாள் லீலா குறும்பாக.

"ஆனால் மேல்நாட்டுப் பெண் களின் கால்கள் அழகாக இருப்ப

தின் காரணம் இக் குதிகால் தூக்கி நிற்கும் செருப்புத் தானென்பது நம் நாட்டுப் பெண்களுக்கு இன்னும் ரகசியமாகவே யிருக்கிறது…" என்றாள் கமலி.

"அப்படியானால் மெதுவாகப் பேசு. காதில் விழுந்தால் அத்தனை பெண்களும் 'ஹை ஹீல்ஸ் ஷூ' போட்டுக்கொண்டால் தான் நடப்போம் என்று தங்கள் கணவன்மாரைத் தொந்தரவு செய்யப்போகிறார்கள்!" என்றாள் லீலா.

சிரிப்பின் நடுவே ரமா கூறினாள் :

"இப்போது இங்கிருக்கும் பெண்களில் ஒருவரேனும் 'ஹை ஹீல்ஸ்' போட்டிருப்பதாகத் தெரியவில்லையே!"

எல்லோரும் குனிந்து ஒருவர் காலை மற்றவர் பார்க்க ஆரம்பித்தனர்……

"நமது பெண்கள் 'ஹை ஹீல்ஸ்' அணியவேண்டுமென்பது அவசியமில்லை. முற்றிலும் தட்டையாகவும் இருக்கவேண்டாம். ஏதோ கொஞ்சம் 'ஹீல்ஸ்' நடுத்தரமாக இருத்தல்வேண்டும். அதுதான் நமக்குத் தேவையானது! ஆனால் குட்டையாக இருக்கும் பெண்களை நான் தடுக்கவில்லை!" என்று முடித்தாள் கமலி.

"நமது பெண்களில் சிலர், செருப்பு அணிவதையே குறை கூறுகின்றனரே! 'செருப்புப் போட்டுக்கொண்டு 'சாபுரா' வென்று திரிஞ்சலைகிறதைப் பாரு!' என்று புகார் கூறும் மாமிகள் எத்தனையோ பேர் இருக்கின்றன நம் நாட்டில்!" என்றாள் பார்வதி துக்கம் நிறைந்த குரலில்.

"செருப்பு அணிவதின் நோக்கம் அவர்களுக்குத் தெரியாததாலேயே அவ்விதம் பேசுகின்றனர். தெருவில் நடந்து போகையில் எச்சில்களையும், மற்றும் அசுத்தங்களையும் மிதித்து அதனால் நோய்களை வரவழைத்துக்கொள்ளாமலிருக்கவே செருப்பு கண்டுபிடிக்கப்பட்டது! காலம் மாற மாறச் செருப்பின் வடிவங்களும் மாறி மாறி வருகின்றன. இன்றைய உலகம் நாகரிக உலகம்! அதற்கேற்றபடி செருப்பும் நாகரிகமாக மாறியிருக்கிறது. அதனால் என்ன தப்பு? பெண்களாயினும் ஆண்களாயினும் சரி, தெருவில் போகும்போது அவசியம் செருப்பு அணியவேண்டும். நாகரிகத்திற்காக அல்ல — சுகாதாரத்திற்காக!"

ரமாவின் பேச்சை மற்றவர்கள் கவனமாகக் கேட்டனர். சரசுவிற்கோ ஒரே உற்சாகமாயிருந்தது. முதல் தினத்திலேயே ரமாவை ஒரு 'மேதாவி' என்று அவள் மனம் தீர்மானம் செய்தது. இப்போதோ அத்தீர்மானம் உறுதியாகி விட்டது!

[வளரும்]

பூந்தோட்டம்

இலக்கியம்—அது ஓர் அழகிய பூந்தோட்டம். அப் பூந்தோட்டத்தில் பலவிதமான வண்ணப் பூக்கள் கொள்ளை கொள்ளையாகப் பூத்துக் குலுங்கிச் சொரிகின்றன. ஆகா, எவ்வளவு பூக்கள்! எத்தனை தினுசான பூக்கள்! எத்தனை விதமான மணம்!...

பூத்துக் குலுங்கி மணம் வீசும் அம் மலர்களில் சில:

> விளம்பர மோகினி
> ஆசிரியர்: வழிப்போக்கன்
> விலை எட்டு அணா
> வெளியிட்டோர்:
> தேன்கூடு பதிப்பகம்,
> திருமங்கலம்

'முன் காலத்தில் மூச்சை உள்ளடக்கி மூவாயிரம் தடவை அரிநாம ஸ்மரணை செய்தால், ஏதோ சின்னவரம் ஒன்று 'சாங்ஷன்' ஆகுமாம். இனி அந்தத் தொல்லை வேண்டியதில்லை. இதோ, கல்கத்தாவிலே ஒரு மகரிஷி வரங்களை வாரிக் கொட்ட முன் வந்திருக்கிறார். அவரதுகோட்டுப் பைகளிலும், கோணிச் சாக்குகளிலும் நிறைந்து கிடக்கும் வரங்களை வங்காளக் குடாக் கடலிலே கொட்டுவதற்கு முன், முந்திக்கொள்ளுங்கள். ஹலோ! பக்த சிரோன்மணிகாள்! ஒரு வரம் கோருக! வாய்த்த சமயம் அரிது. ஸ்டாக் உள்ள வரையில் தான் கோரிக்கைகள் ஏற்றுக்...'

என்ன சிரிக்கிறீர்கள்?

நாட்டில் நடமாடும் மோசத்தனம் நிரம்பிய 'புளுகினஸர்' விளம்பரங்களை மக்களுக்கு லேசாகக் குத்திக்காட்டி உஷார்ப் படுத்தும் நல்ல நகைச்சுவைப் பஞ்சாமிர்தங்கள் தாம் 'விளம்பர மோகினி' என்ற இந் நூல். இந் நூலில் ஐந்து கட்டுரைகள் தொகுக்கப் பெற்றிருக்கின்றன. ஐந்தும், ஐந்து ஹாஸ்ய ரத்தினங்கள்! அருமையான புது மணத்தை அள்ளிச் சொரியும் ஐந்து மகிழம்பூக்கள்! ஒரு காலத்தில் 'பொன்னி'யை அலங்கரித்த பூக்களை யாவரும் எப்போதும் முகர்ந்து அநுபவிக்கலாம்!

★

வளரும் இலக்கியம்

"உழைப்பாளி வர்க்கமே, ஒன்றுசேர்! உரிமைப்போராட எழுந்து வாருங்கள்! நமது இலட்சியம் ஈடேற எல்லோரும் இணைந்து வாருங்கள்!..." என்று புரட்சிப் பண் பாடி புதியதோர் உலகமைக்கப்

> **புரட்சி எழுந்தது!**
>
> ஆசிரியர் : நிஷ்டை
>
> புதுமலர் நிலையம்
>
> இராஜபாளையம்
>
> விலை 0—12—0

புதுமை நிறை உள்ளங்களைக் கூவியழைக்கிறது, இந் நூலிலுள்ள அத்தனை சிறுகதைகளும்! நவரத்தினங்கள் போன்ற ஒன்பது உயர் கதைகளை உள்ளடக்கிய இந் நூலைப்பற்றிப் பிரபல தமிழ் எழுத்தாளர் 'மாயாவி' அவர்கள் தமது முகவுரையில் 'நிஷ்டையின் கதைகளில் ஜீவநடை இருக்கிறது. சிறுகதை இலக்கணங்கள் நன்கு பொருந்தியுள்ளன. விறுவிறுப்பையூட்டும் சம்பவக் கோர்வைகள் பின்னிக் கிடக்கின்றன. மணி மணியான இக் கதைகளைப் பத்திரிகையில் படிக்க வாய்ப்புக் கிட்டாத அன்பர்களுக்கு இப்புத்தகத்தை தைரியத்துடன சிபாரிசு செய்கிறேன்' என்று அழுத்தமாகச் சிபாரிசு பண்ணுகிறார். அதில் நியாயமும் உண்டு. ஒவ்வொரு கதையும் ஒவ்வொரு வாடா மல்லிகைதான்! முகர்ந்து ரசித்துப் பயன் பெறலாம்!

★

'...மடல் பெரிது தாழை, மகிழினிது காந்தம்...' —இச் சிறு நூலைப் படித்துப் பார்த்த கணமே, இந்தப் பாட்டுத்தான் நெஞ்சில் மணத்தது. ஏனெனில் 'கனா பின்னா' என்று கிறுக்கித் தள்ளும் கண்ணாறுவிக் கதை

> **பேசும் மாக்ஸிம் கார்க்கி**
>
> தொகுத்தவர் : வே. துரைராசு.
>
> விலை ஒரு அணா
>
> சேரன் பதிப்பகம்,
>
> மதுரை.

களைவிடச் சிரஞ்சீவி எழுத்தாளர் கார்க்கியின் பல நூல்களிலிருந்து நல்ல நல்ல கருத்துக்களைத் தேர்ந்தெடுத்துத் தொகுத்தளித்திருக்கும் இச் சிறு கதம்ப மாலை எத்தனையோ மடங்கு பலனளிக்கும். இச் சிறு நூலில் மணக்கும் ஒவ்வொரு ரத்தின மொழியும் மனப்பாடம் பண்ண வேண்டிய அளவு சிறப்பு வாய்ந்தது. நல்ல முயற்சி.

—குமணன்

★

இலக்கியப் பூங்கா! இனிமையான தென்றல்; மனதை மயக்கும் மணம்; கண் கவரும் வண்ண மலர்கள்; வசந்த லீலையில் திளைக்கும் வண்டினங்கள்; மலருக்கு மலர் தாவிப் பறக்கும் பூம் பறவைகள்; கூவும் கோகிலங்கள்; கொஞ்சிப் பேசும் கிளிகள்; ஆடிடும் மயில்கள்; சில்லென்று சிலுசிலுத்தோடும் சிற்றோடை; சிந்தனைக்குச் சுவையூட்டும் செந்தேன் துளிகள்! இவை போதுமே இன்பத்தின்

எல்லையை எட்டிப்பிடிக்க! சமுதாயச் சோலையிலிருந்து 'அண்ணா' அவர்கள் திரட்டித் தந்த தேன் துளிகளை யார்தான் பருகாமல் இருக்கமுடியும்? ஒவ்வொரு மனிதனும் இதைச் சுவைத்தே தீரவேண்டும் என்ற எண்ணத்துடன் நண்பர் 'ஊடுருவி' அவர்கள் இந்நூலை உருவாக்கியிருக்கின்றார். இவ்வளவு மலிவான விலையில் வெளியிட்ட 'வள்ளுவர் பண்ணை'யாளரை எவ்வளவு

> **தேன் துளிகள்**
> ஆசிரியர் : அண்ணாதுரை
> தொகுத்தவர் : ஊடுருவி
> **விலை ரூபாய் ஒன்று**
> வெளியிட்டோர் : வள்ளுவர் பண்ணை,
> சென்னை—2

புகழ்ந்தாலும் தகும்; பொருந்தும். தவறாமல் எல்லோரும் வாங்கிப் படிக்கவேண்டிய புத்தகம் இது! இந் நூலுக்கு மதிப்புரையே தேவையில்லை. காரணம், ஆசிரியர் 'அண்ணா'! தேன் துளிகளைச் சேகரித்தவர் ஊடுருவி!

★

> **புராண மதங்கள்**
> ஆசிரியர் : அண்ணாதுரை
> தொகுத்தவர் : ஊடுருவி
> **விலை ரூபாய் ஒன்று**
> வெளியிட்டோர் : வள்ளுவர்பண்ணை,
> சென்னை—2

புரான மதங்களைப்பற்றி 'அண்ணா' அவர்கள் கூறியுள்ள கருத்துகள் ஒவ்வொரு மனித உள்ளத்திலும் தேங்கிக் கிடக்க வேண்டிய அமிர்தம். பக்கத்துக்குப் பக்கம் பகுத்தறிவின் மணம் வீசுகிறது. ஒரே வரியில் எழுத வேண்டும் என்றால் நண்பர் 'ஊடுருவி' அரும்பாடு பட்டு இத்தொகுப்பை நூலாக வடித்துள்ளார். ஒவ்வொரு புத்தக சாலையிலும் இடம்பெறவேண்டிய நூல் இது! அழகான அச்சுடன் மலிவான விலையில் விற்பனைக்கு வந்துள்ள மாணிக்கம்!

—வேதாளம்

★

> **நாடக விழா மலர்**
> பம்பாய்த் தமிழ்ச்சங்கம்,
> மாதுங்கா

பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தினர், டி. கே. எஸ். சகோதரர்களின் நாடகக் குழு பம்பாயில் நாடகங்கள் நடத்திய சந்தர்ப்பத்தை யொட்டி நாடகவிழா மலர் ஒன்றைச் சிறப்பாக வெளிக்கொணர்ந்திருக்கின்றனர். படித்து ரசிக்க விஷயம் நிறைய இருக்கிறது!

—பூபாலன்

வேனிற்காலத்தீர்க்கு!

வாணிதாசன்

ஈருகித் தீய்ந்து, கடுங்குளிர் மழையால் வேதனைப்பட்டு, பனியால் சோர்ந்து படுத்துறங்கிக் கொண்டிருந்த பூமி விழித்துக் கொண்டது. வேனிற்காலத்தின் குழந்தைப் பருவம்! எங்கும் ஒரே பசுமை. குளிரும் வெப்பமும் இல்லாத வெதவெதத்த மென் காற்று பூமணத்தை வாரி வந்து கண்ட கண்ட இடமெல்லாம் இறைத்துக் களித்தது. புதரெல்லாம் பூக்கள்! பொய்கையெல்லாம் பூக்கள்! இலையற்ற மொட்டைமரங்கள், காம்பும் கழியுமாகத் தலை விரித்திருந்த செடிகள் புன்முறுவல் காட்டி என்னை அழைத்தன. எத்தனை பொலிவு! எத்தனை மெருகு! புதரில் தவழ்ந்து, பொய்கையில் குளித்துப் புதுமணம் நுகர்ந்து வரும் தென்றல், நிலைதடுமாறி மனித உடலில் உராய்ந்து உள்ளத்தைத் தூண்டி உணர்வை வளர்த்தது; இன்பமூட்டியது. எத்தனை ஆசை எண்ணங்கள்! அழகான சற்பனைக் கோட்டைகள் உருவு பெறு ஓவியம்போல உள்ளத்தில் முளைத்தன. கையை விரித்துக் காத்துக் கிடக்கும் வசந்தத்தை அப்படியே கட்டியணைக்கத் தூண்டியது உள்ளம்.

கடந்த குளிர் மிகமிகக் கொடுமை! மே மாதம் பிறந்தது; என்னையும் அறியாது வேனிற்கால மயக்கம் மெல்ல மெல்ல ஏறி என் அறிவை அடிமைப்படுத்திவிட்டது.

திறந்து விடப்பட்ட சன்னலின் வழியே புகுந்த காலை இளங்காற்று என்னைத் தட்டி எழுப்பியது. எழுந்தேன்; சன்னலின் வழியே அண்டைவீட்டுக் கூரையின்மேல் நீலம் கவிழ்ந்த வானம் தீப்பற்றி எரிவதைப் போல் தோன்றியது. மங்கிய தங்கரேக்கைக் குழைத்து யார் தான் தாரை தாரையாகப் பூசிவிட்டார்களோ? நீலப் பெரு வெளிக்கிடையே உருண்டோடும் செங்குருதி ஆறு மேக மலைகளைச் சுற்றி வளைந்து ஓடிக் கொண்டிருந்தது. காலைக் கதிரவனின் கை வண்ணம் இவை! சன்னலுக்கெதிரே வீட்டின் கூரையில் குடும்பம் நடத்தும் சிட்டுகள் ஏதேதோ வம்பளந்து கொண்டிருந்தன.

அழும் பிள்ளைகளைத் தூங்க வைக்கும் ஆயாக்களின் தாலாட்டைக் கேட்டுத்தான் அந்தக் காக்கைகள் கரைந்தனவோ, என்னவோ! தெருவெல்லாம் கலகலப்பு! மகிழ்ச்சி உயிர்பெற்று

தைப்போலத் தோன்றியது அந்தத் தெரு.

வெளியே கிளம்பினேன்; எங்கே போகிறேன் என்பது எனக்கே தெரியாது.

சந்தித்த மக்கள் ஒவ்வொருவர் முகத்திலும் புதுப் பொலிவு! புன்னகை! திரும்பிய வேனிற் காலத்தின் தூண்டுதல் எங்கும் நிறைந்திருந்தது. ஆடை அலங்காரம் அதிகமின்றிக் காலையில் நடமாடிக்கொண்டிருந்த கன்னிப்பெண்களின் கண்களிலே மகிழ்ச்சி திரையிடப் பட்டு, நடை பேச்சுவாயிலாக எட்டிப் பார்த்தது. என்னிலும் சில மாறுதல்கள் ஏற்படுவதை நான் உணராமலில்லை.

எப்படி எதற்காக நான் சென் நதிக்கரைக்கு வந்தேன்? எனக்கே புரியாத செய்தி இது. சிறு சிறு இயந்திரப் படகுகள் ஆற்றுநீரைக் கிழித்துக் கொண்டு ஓடின. அடுத்திருக்கும் சிற்றூர் வயல் வெளி, தோப்பு களுக்கும் போகவேண்டும் என்ற ஆசை எழுந்தது.

அந்தப் பாலத்தின் அருகில் மக்கள் கூட்டம் அதிகமாக இருந்தது. வேனிற்காலச் சூரியன் மக்களை வீட்டிலேயே விட்டு வைப்பதில்லை. அவர்களையும் அறியாமல் அவர்களை வெளிக் கிழுத்துவிட்டு வேடிக்கை பார்த்தது.

அந்தக் கூட்டத்தில் என் அண்டை வீட்டுக்காரப் பெண் ஒருத்தி நின்றுகொண்டிருந் தாள். அவள் அக்கம்பக்கத்தில் வேலை செய்யும் ஏழைப் பெண். [illegible]ழகி: பாரீஸ் நாகரிகம் முழுமையும் [illegible]ளிடம் கொண்டிருந்தது. குடி சுருண்டு தொங்கும் அ[illegible]ண்டு கிய கருங்கூந்தல் அரைக்காழு மறைத்துப் பிடரி வரையில் தொங்கி அசைந்துகொண்டிருந் தது. ஆற்றோரக் காலைக்காற்றால் அக்கூந்தல் அலைக்கழிக்கப் படும்போது ஏதோ கரும் பட்டுப் பஞ்சு காற்றிலே மிதந்து வந்து கன்னத்தில் படிந்ததைப்போலப் பார்ப்பவர்களுக்கும் கருத்துக் கும் விருந்தாக இருந்தது.

அவள் பிடரியிலே இரு கூறுகப் பிரிந்து தொங்கும் கூந்த லின் அசைவை வைத்தகண் வாங்காது பார்த்துக்கொண்டே நின்றேன். என் கண்ணின் கதிர் ஒளி அவள் கழுத்தைத் திருப்பி யதோ! அல்லது அவளாகவே திரும்பினாளோ! அவள் தலை யைத் திருப்பி என்னைப் பார்த் தாள். அந்த ஒரு நொடிப் பார்வை ஊடுருவிப் பாய்ந்து தாழ்ந்தது. கன்னத்தில் சிறு மடிப்பு. கடைவாயில் பிறந்து உடன் இறந்த புன்னகையின் அத்தாட்சி. ஓவிய முதற்கோடு.

ஆறு அமைதியாக நீண்டு கொண்டே இருந்தது. வானத் திலும் காற்றிலும் அமைதியான சூடு நிலவியது. அவளின் தாழ்ந்த விழிகள் நிமிர்ந்தன; அவளையே பார்த்துக்கொண் டிருக்கும் என்னை நோக்கின. இம்முறை அவள் உதட்டில் வெளிப்பட்ட புன்சிரிப்பு என் உள்ளத்தில் நன்றாகச் சென்று பதிந்துவிட்டது. ஆயிரம்

பொருள்களில் நுழைந்து திரும்பும் அவள் விழி வீச்சு இது வரையில் எனக்குத் தெரியாத பல செய்திகளை விளக்கிக் காட்டியது. அவ்வளவு கவர்ச்சியான பார்வை! குளிர்மை! குறுகுறுப்பின் இருப்பிடம்! என்னையும் அறியாது என் அறிவு இன்ப உலகை நோக்கிச் சிறகடித்து எழுந்தது. ஏதேதோ எண்ணி எண்ணி ஓங்கின இன்பக் கோட்டைகள். எழில் ஓவியங்களுக்கு அடிகோலியது அறிவு. அடைய முடியாத இன்பததை அடையப் போவதாகக் கூத்தாடியது மனம்.

அவளைச் சேர்த்து வாரித் தூக்கி இன்ப உலகிற்கு இழுத்துச் செல்லவேண்டுமென்று கைகள் துடித்தன.

நான் அவள் அருகில் நெருங்கினேன். பின்புறமிருந்து யாரோ என் தோளைப் பிடித்து இழுத்தார்கள். திடுக்கிட்டுத் திரும்பினேன். நடுத்தர வயது; கவலை தோய்ந்த முகம்; என்னையே பார்த்துக்கொண்டு ஒருவர் நின்றிந்தார்.

"உன்னிடம் பேசவேண்டும்" என்றார்.

நான் சிறிது கோபமாக முகத்தைச் சுளித்துக்கொண்டேன். என் முகநிலையை நன்றாகக் கவனித்த பிறகும் "முக்கியமான செய்தி. இப்படி வா!" என்றார்.

அவ்விடத்தை விட்டுப் படகின் மற்றொரு முனைக்கு நாங்கள் வந்தோம்.

"தம்பி! பனி, குளிர், மழை நிறைந்த குளிர்காலம் வரும்போது உன் கால்களை எப்பொழுதும் சூடாக்கிக் கொள்! தலையை உடம்பை மூடிக்கொள்; சளி பிடிததுக் கொள்ளும்; இருமல் உண்டாகும்; மார்வலி ஏற்படும்' என்றெல்லாம் மருத்துவர் உனக்குப் புத்திமதி கூறுகிறார். நீ உடனே வேண்டிய முன்னேற்பாடோடு இருக்கிறாய். பிளானல் அணிந்து கொள்கிறாய். அதன் மேல் அழுத்தமான சட்டை கம்பளம் போர்வை இவ்வளவு இருந்தும் அந்தக் குளிர் காலம் மாறும்வரையில் நீ வெளிக்கிளம்பாது வீட்டினுள்ளேயே இருக்கிறாய். ஆனால்

வேனிற்காலம் தழைபூ, குளிர் கால்படை சூழ வரும்போது வயல் வெளி உன்னை மயக்கி மனதிலே உணர்ச்சி வெறியைக் கிளறிவிட்டுத் தூண்டும்போது. தம்பி, காதல் பொல்லாதது! தற்காத்துக் கொள்! அது எங்கும் மலிந்துவிட்டது. எந்த மூலையிலிருந்தும் அது உன்னைக் கெடுத்துவிடும். அது பல உருவில் பல தந்திரங்களால் உன்னை வீழ்த்திவிடும். அதன் கூரிய பொலிவானபடைகள் எந்தக் கொலையையும் செய்ய உன்னைத் தூண்டும். தற்காத்துக் கொள்! இது சளியை விட, இருமலை விட, மார்வலியைவிட மிகமிகக்கொடியது. ஈவு இரக்கமற்றது; பொல்லாதது' என்று யாராவது எச்சரிக்கிறார்களா? போகட்டும்; அரசாங்கமாவது ஒவ்வொரு பெருஞ்சுவரிலும் 'வேனிற்காலம்! பிரான்சுக் குடிமக்களே, தற்காத்துக் கொள்ளுங்கள்; காதல்பொல்லாதது' என்று விளம்பர அறிக்கை ஒட்டுகின்றனரா? அவர்கள் செய்யத் தவறிய அந்த நல்ல காரியத்தை நான் செய்கிறேன். தம்பி, காதல் பொல்லாதது. தற்காத்துக் கொள்! அதன் வலைகள் எங்கும் விரிக்கப் பட்டுள்ளன. ரஷியாவில் பனிக்காலத்தில் வழிப்போக்கனை எச்சரிப்பதைப்போல நான் உன்னை எச்சரிக்கிறேன். அதுதான் மனித தர்மம்'' என்றார்.

இந்தப் புதுமையான மனிதனைப் பார்த்து ஒரு புறம் வியப்பும், ஒரு புறம் சிரிப்பும் வந்தது எனக்கு. சற்று மரியாதையோடு "மற்றவர் காரியங்களில் தாங்கள் தலையிடுவது தவறு'' என்றேன். அது அந்த மனிதனுக்கு ஒரு சரியான சவுக்கு!

ஆனால் அந்த மனிதன் சிரித்துக்கொண்டே, "பாழுங்குட்டையில் விழுந்து ஒருவன் சாகப் போகிறான், அவன் சாகட்டுமென்று பார்த்துக் கொண்டுதான் இருக்கவேண்டுமோ? அதுதானா மனிதனின் கடமை? என் கதையைக் கேள். நான் எதற்காக இப்படியெல்லாம் உன்னிடம் கூறுகிறேன் என்பது பிறகு விளங்கும்.

"கடந்த ஆண்டு, இதே வசந்த காலத்தின் போதுதான் என் கதையின் முதல் அத்தியாயத்தின் ஏடுகள் நிறைந்தன. என் கதையைக் கூறுவதற்கு முன் நான் யாரென்று கூறிவிட வேண்டாமா? நான் துறைமுக அலுவலகத்தில் வேலை செய்து கொண்டிருந்தேன். அங்குள்ள தலைவர்கள் ஒரே நெருப்புத் துண்டுகள். படை வீரர்களை நடத்துவதைப்போலக் கண்டிப்பாக என்னை நடத்தி வந்தார்கள். சீ, இந்த மனிதப் பிண்டங்கள் கீழ்நிலையில் இருக்கும்போது ஒரு மாதிரி, மேல் நிலையை அடைந்து விட்டால் அப்பா! கண்ணே தெரிவதில்லை; ஈவு இரக்கம் அற்றுவிடுகிறது; இதற்கு முன் எப்படியிருந்தோம் என்ற நினைவே அவர்கட்கு இருப்பதில்லை... போகட்டும். என் அலுவலகத்தில்

இருந்தபடியே நீலவானத்தில் புட்கள் பறப்பதைக் கண்டேன். ஏடுகள், அட்டைகள் நிறைந்த அலுவலகத்தினுள் ஆடவேண்டும்போலத் தோன்றியது. அவ்வளவு மகிழ்ச்சி! வசந்த காலத்தின் தூண்டுதல் அது!

"வெளியே சென்று சுற்றித் திரிய உணர்வு தூண்டியது. எவ்வளவோ மனதை அடக்கிப் பார்த்தேன்; ஆசை வளர்ந்து கொண்டே இருந்தது; அடங்கவில்லை. தலைவன் ஒரு குரங்கு. அவனிடத்தில் சென்று உடல் நலமில்லை என்று ஒரு புளுகு புளுகினேன்; நலமில்லாதவனைப் போல் நடித்துக் காட்டினேன். அவன் என்னை ஏற இறங்கப் பார்த்துவிட்டு 'அப்படியொன்றும் நோய் பெரிதாகத் தோன்றவில்லையே! இதுபோன்ற ஆட்களிருந்தால் வேலைகள் எப்படி நடப்பது?......ம்— இரண்டு நாளில் வந்துவிடவேண்டும்' என்றான்.

"அலுவலகத்தைத் தாண்டியதும், சேன் நதிக்கரைக்கு ஓடினேன். படகில் ஏறிச் சிற்றூர் வயற்காடு, தோப்பு துரவுகளில் சுற்றித் திரியவேண்டுமென்ற ஆசை.

"அன்று என் தலைவன் இரண்டுநாள் விடுதலை கொடுக்க மறுத்திருந்தால் எவ்வளவு நன்மையாக இருந்திருக்கும் தெரியுமா?...

"படகு, ஆறு, ஆற்றங்கரையிலுள்ள சிற்றூர், தோப்புகள் என் கருத்தைக் கவர்ந்திருந்தன. உள்ளம் மகிழ்ச்சியில் உப்பியிருந்தது. ஓடவேண்டும், பாடவேண்டும், பேசவேண்டும்—இப்படிப் பலப்பல எண்ணங்கள் என்னைத் தூண்டின. காதலின் வலை விரிக்கப்பட்டிருந்தது. நான் அதை உணர்ந்துகொள்ளவில்லை.

"என் எதிரில் ஒரு கன்னிப் பெண் கையில் ஒரு சிறு மூட்டை வைத்துக்கொண்டு படகில் உட்கார்ந்திருந்தாள்.

"அவள் நல்ல அழகி! காலம் நன்றாக இருக்கும்போது கண்ணிலே படுகின்ற பெண்கள் அத்தனை பேரும் அழகியாகத் தான் தோன்றுவார்கள்! அது வசந்தருதுவின் வளப்பம். அவர்கள் கண்ணுக்குக் குளிர்ந்த காட்சிப் பொருளாக—கருத்தைக் கவரும் காந்தமாக— இன்னும் என்னென்னவோ மாதிரியாக இருப்பார்கள்.

"நான் அவளைப் பார்த்தேன். அவளும் என்னைப் பார்த்த அந்தப் பெண்ணைப்போலவே அடிக்கடி என்னைப் பார்த்தாள். தலையைத் தாழ்த்திக் கடைக் கண்ணால் பார்த்துச் சிரித்தாள். நீட்டுவானேன்? நாங்கள் பேசவில்லை எங்கள் கண்கள் பேசிப் பழகிவிட்டன.

"அவள் அடுத்த சிற்றூரில் இறங்கினாள். நானும் அவளைத் தொடர்ந்தேன். அவள் வந்த வேலையை முடித்துவிட்டுத் திரும்பினாள். படகு புறப்பட இருந்தது; நான் அவள் அருகிலே நெருங்கி 'வசந்த காலம் எவ்வளவு இன்பமாக இருக்கிறது, பார்த்தாயா!

மிருக வைத்தியர்: உங்கள் பசுவுக்குத் தினம் இரண்டு வேளை இந்த மருந்தில் ஒவ்வொரு தேக்கரண்டி கொடுங்கள்.

குடியானவன்: எங்க பசு கரண்டியிலே குடிக்காதுங்க.... வழக்கமாத் தொட்டியிலே தானுங்க குடிச்சுப் பழக்கம்....

தோப்பும் துறவும் ஒரே திருவிழாவாகவல்லவா இருக்கிறது, என்றேன்.

அவள் 'ஆம்' என்றாள்.

'அப்படியானால் அவைகளைச் சுற்றிப் பார்த்துவிட்டுப் போவோமா?' என்றேன்.

"அவள் என்னைக் கூர்ந்து கவனித்தாள். நான் எவ்வளவு மதிப்புள்ளவன் என்று அவள் என்னை எடைபோட்டிருக்க வேண்டும்! சிறிது தயங்கி உடன்பட்டாள். நாங்கள் தோப்பினுள் நுழைந்து மரங்களுக்கிடையில் ஒருவர் பக்கத்தில் ஒருவராக நடந்துகொண்டே இருந்தோம். சருகு மூடிய தரையில் நீண்ட புற்கள் பச்சைப் பசேலென்று ஓங்கி வளர்ந்து ஒன்றை ஒன்று மோதிக் காற்றில் அசைந்தாடின. சிறுசிறு தவளைகள் வெட்டுக்கிளிகள் சூரிய ஒளியில் மூழ்கிப் புற்களுக்கிடையே கலகலப்பை உண்டாக்கின. பூக்களின் நறுமணம் உடலுக்குப் புத்துணர்வு வெறியை ஏற்றிக்கொண்டிருந்தது. எங்கும் பறவைகளின் இனிய பாடல்கள்! வயற் காற்றால் உந்தப்பட்டு அவள் மான் குட்டியைப்போல அந்தத் தோப்பு முழுவதும் ஓடிக் கொண்டிருந்தாள். நானும் அவளைப் பின்தொடர்ந்து ஓடினேன். மனிதன் சில சமயங்களில் விலங்காகவே மாறி விடுகிறான்! அவளை அண்டி அண்டி ஓடிக்கொண்டிருந்தேன்.

"அவள் நன்றாகப் பாடினாள். சினிமாப் பாடல்கள் ஒவ்வொன்றும் அப்படியே இசைத்தட்டுகளைப் போல அவள் வாயிலிருந்து எழுந்து ஒலித்தன. குறிப்பாக அந்தக் காதற்பாட்டு என்னை முழு வெறியனாகவே ஆக்கிவிட்டது.

"அவள் சோர்ந்து ஒரு மாத்தடியில் புற்றரைமேல் உட்கார்ந்தாள். நான அவள் காலடியில் உட்கார்ந்து அவள் கைகளைப் பிடித்தேன்; கைகள் வேலை செய்து காய்த்து மரத்திருந்தன.

"அவள் கைவிரலைச் சேர்த்துப் பிடித்து நெறித்து 'உழைப்பின் முத்திரை!' என்றேன். அதன் பொருள் என்ன என்பது தெரியுமா உனக்கு? தொழிற்சாலையிலுள்ள அத்தனை ஆண்களின் பரிகாசத்திற்காட்பட்டு, பசிக்காட்பட்டு, வெறியில் பிதற்றும் வீண் சொற்களுக்காட்பட்டு, வேதனை கிளறும் விளையாட்டுக்கு உடன்பட்டு அவர்களைப்போலக் கண்டதைப் பேசி அன்றாட வாழ்வின் அடிப்படைப் பொருளுக்காக எதையும் சகித்துக்கொண்டிருப்பது தான் உழைப்பின் முத்திரை. அதிலும் ஏழைப் பெண்களின் உழைப்பு சிரியதாகஇருந்தாலும், முன் கூறிய யாவும் நிறைந்ததாகத்தான் இருக்கும், இருக்க வேண்டும்! அதன் பெயர்தான் தாங்கள் கூறிய உழைப்பின் முத்திரை" என்றாள்.

"நாங்கள் நீண்டநேரம் ஒருவரை ஒருவர் பார்த்துக் கொண்டே இருந்தோம். பெண்களின் கண்கள்... அடடா! எத்தனை கவர்ச்சி! எத்தனை செல்வாக்கு! மனிதன் அறிவைக் குழப்பி அடிமைப்படுத்தி ஆட்டிப்படைத்து அரசோச்சும் ஆற்றலுள்ளவை! அழகும் அளவிடமுடியாத அன்பும் நிறைந்தவை அல்லவா அந்தப் பொல்லாத கண்கள்?

"நான் அவள் அருகில் குந்தி என் உள்ளத்தைத் திறந்து காட்டினேன். என் காதற்கோட்டையின் விளக்கத்தைக் கூறினேன். எதற்கும் அவள் வாயைத் திறக்காமல் மெல்லச் சிரித்துக் கொண்டே இருந்தாள்.

"காதலில் எப்பொழுதும் பெண் வியாபாரியாகவும், ஆண் வாங்குபவனாகவும் இருக்கின்றனர். வியாபாரி தன் பொருளைப் பற்றி என்ன என்னவோ கூறி, வாங்கும் மனிதனின் அறிவை மயக்கிவிடுகிறான். அவள் தன் சரக்கைப்பற்றிப் புகழுகிற அளவு கிராக்கி காட்டுகிற அளவு வாங்குபவனுக்குத் தெரிவதே இல்லை.

"என் தவறை நான் சில மாதங்களுக்குப் பிறகே உணரமுடிந்தது. நான் மற்றவர்களைப்போல உடலை விரும்பவில்லை; அன்பை, அறிவைத்தான் விரும்பினேன். இல்லையென்றால் நான் அந்த நேரத்தை வேறு வகையில் பயன்படுத்தி இருக்கலாம்.

"நீண்ட நேரத்திற்குப் பிறகு நாங்கள் திரும்பினோம். நகரத்திற்கு வந்த பிறகே நான் அவளை விட்டுப் பிரிந்தேன். அவள் முகம் சோர்ந்திருந்தது. 'ஏன், எதற்காக இந்த வாட்டம்' என்று நான் அவளை வினவினேன். 'வாழ்க்கையில் இதுபோன்ற இன்பமான நாட்களை இனிப் பார்க்க முடியுமா?' என்றாள். என் உள்ளத்தில் அச் சொற்றொடர் ஊடுருவிப் பாய்ந்து என்னை வருத்தியது.

"அடுத்த ஞாயிற்றுக்கிழமை நான் அவளைச் சந்தித்தேன். பிறகு ஒவ்வொரு ஞாயிறும் அவளை எங்கெங்கோ அழைத்துப் போனேன். அவள் என் உள்ளத்

தில் காதலை வளர்த்தாள்; நான் அறிவிழந்தேன்; அவளை மணந்துகொண்டேன்.

"யாருமற்றுத் தனிமையாக வேலை செய்துகொண்டிருக்கும் ஒரு இளைஞனுக்கு என்ன தெரியும்? அறிவுரை கூற யார் உண்டு? கலியாணம் செய்துகொண்டால் வாழ்க்கையில் இன்பமாக இருக்கும் என்று சொன்னார்கள். திருமணம் செய்து கொண்டேன்.

"இப்போது எவ்வளவு தொல்லைப் படுகிறேன் தெரியுமா? காலையிலிருந்து மாலை வரையில் ஒரே தொல்லை! சொல்வதைக் கேட்பதே கிடையாது; ஏதாவது தொந்தரவு செய்து கொண்டே இருப்பாள்; எப்பொழுதும் காதற் பாட்டுப் பாடுவாள். வீடாயிற்றே, அதற்குரிய அடக்கம் ஒடுக்கம் வேண்டுமே என்றெல்லாம் அவளிடம் சொல்லிச் சொல்லி வாய் அலுத்துப்போனேன். வேலைக்காரர்களுடன் சண்டைக்கு நிற்பது, அண்டை வீட்டுக்காரியிடம் குடும்ப இரகசியத்தைக் கூறுவது படுக்கையறை நிகழ்ச்சியை வெட்கமின்றிப் பலரிடம் சொல்லிப் பூரிப்பது... அப்பப்பா எவ்வளவு தொல்லை தெரியுமா? இந்தத் தொல்லையை விட்டு விடுபட எங்காவது ஓடிவிடுவோமா என்றுகூட நான் நினைத்ததுண்டு......"

இப்படிக் கூறி அவர் சிறிது நேரம் மௌனமாக இருந்தார். அவர் கதையைக் கேட்கக்கேட்க அவர்மேல் இரக்கம் தோன்றியது. அவருக்கு ஏதாவது சொல்லலாமென்று நினைத்தேன். அதற்குள் படகு சிற்றூரின் கரையில் வந்து நின்றது.

என் அறிவைக் குழப்பிய அந்தக் கன்னிப் பெண் இறங்க எழுந்தாள். என் அருகில் வந்து கடைக்கண்ணால் என்னைப் பார்த்துச் சிரித்துவிட்டு இறங்கினாள்.

நானும் அவளோடு இறங்க எழுந்தேன். என்னிடம் இவ்வளவு நேரம் பேசிக்கொண்டிருந்த அவர் என் சட்டையை பிடித்து என்னைப் பின்புறமாக இழுத்தார்.

"வேண்டாம்; போக வேண்டாம்" என்று உரத்துக் கூவினார். அங்கிருந்த அத்தனை தலைகளும் எங்களைத் திரும்பிப் பார்த்தன; ஒரே குறும்புச் சிரிப்பு!

எனக்கு அந்த மனிதன் மேல் ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. நான் அசையாமல் நின்றுகொண்டிருந்தேன். அந்தக் கூட்டத்தில் கலவரத்தை உண்டுபண்ண எனக்குத் தைரியமில்லை. வெட்கம் என்னைப் பிடுங்கித் தின்று கொண்டிருந்தது.

படகு நகர்ந்தது.

அவள் கரையில் நீண்ட நேரம் நின்று என்னை எதிர்பார்த்துவிட்டு நடந்தாள். திரும்பித் திரும்பிப் பார்த்து ஏங்கினாள். ஆனால் அந்த மனிதர், "நான் ஒரு நல்ல காரியத்தைச் செய்தேன்" என்று என் காதில் முணுமுணுத்தார்.

[மூலம்—மாப்பசான்]

43 Persons are awarded prizes in our puzzle No. 10. 1st Prize (1, Bhanwarilal sharma of Assam. 2, S. G. Singh. Ajmer. 3, Sep. N. Atchuthan, N. Delhi. 4, S. Mohanty Orissa. 5, M. K. Kaliappa chettiar, Nattarasankottai .6, P. S. Pillai. Ramnad. 7, Naik. E. K. Samy. Poona 3. 8, S. V. Ganeshan. Sivaksai. 9, S. K. Jain. W. Bengal. 10, P. S. Sebastian. Coonoor. and 3rd prize 28, 5th prize 5 persons.

Full particulars are published in the Rainbow dated *10-6-52*

ரிஜிஸ்டர் நெ. 277   **ரூ. 25,000 பரிசு**   போட்டி நெ. 12

MS Premier Bank of India Ltd-ல் சீல் செய்துவைக்கப் பட்டுள்ள சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின்பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர் களுக்கு முதல் பரிசு ரூ. 12,000. முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு இரண்டாம் பரிசு ரூ. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்ரும் பரிசு ரூ. 3000. முதல் மூன்று நம்பர் சரியானவிடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000 முதல் இரண்டு நம்பர்கள் சரியான விடைக்கு *5*-ம் பரிசு ரூ. 1000 அளிக்கப்படும். எங்கள் ஸீல் வைத்த விடைகள்படி எல்லாம் சரியாக இருக்க வேண்டும். மேற்கண்ட பரிசுகள் எங்கள் கம்பெனியின் நிபந்தனைப்படி வசூலுக்கு தகுந்தபடி பகிர்ந்து கொடுக்கப்படும்.

AMBAL'S PUZZLES

KEY S. NO. 10 *30 TO 45=150

33	43	44	30
38	36	35	41
34	40	39	37
45	31	32	42

We hereby certify that the above is the solution in original deposited with us by Ambal's Puzzles No. 10 on 2/5/52 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

For The Premier Bank of India Ltd,

V. Ramanathan 2.5.52
Agent. Madras 2

முடிவு தேதி 27–6–52   **விடை 12–7–52**

பிரவேசக் கட்டணம் : கூபன் *1*-க்கு ரூ. *1-0-0*   6 கூபன் கொண்ட ஸெட் 1-க்கு ரூ. 5-0-0

158

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:— 32 முதல் 47 வரையுள்ள எண் களைக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில், மேலிருந்து கீழும், இட மிருந்து வலமும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினலும் 158 வரும்படி யாக அமைக்க வேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோ கிக்க வேண்டும்.

விதிகள்:— தனி வெள்ளைக் காகிதத்தில் தேவையான கட்டணத்துடன் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானுலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும் பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்பட வேண்டும். பிரவேசக் கட்டணத்தைக் கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பலாம். மணியார்டர் செய்த ரசீதைக் கூபன்களு டன் சேர்த்து அனுப்ப வேண்டும். வசூலுக்குத் தகுந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானது; சட்டபூர்வமாய்க் கட்டுப்படுவது மாகும். போட்டி முடிவு **RAINBOW** மாதமிருமுறைப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும், அல்லது 4 அணு ஸ்டாம்பு அனுப்பினல் விடை அனுப்பப்படும்.

கூபன்கள் அனுப்பவேண்டிய விலாசம் :—

AMBAL PUZZLE NO 12

28 (14) Thandavaraya Gramani Street, Tondiarpet, MADRAS - 21

உணர்ந்த உள்ளம்

கி. பாலசுப்ரமணியம்

பொழுது போக்கப் பூங்காவில் ஒரு நண்பர் கும்பல் கூடி இருந்தது. ஏதேதோ மனதில் தோன்றிய விஷயங்கள் எல்லாம்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"...ஐயா, புண்ணியவான்களே, ரொம்பப் பசிக்கிறதுங்க; ஐயா, ஏதாவது துட்டு இருந்தாக் கொடுங்க, ஐயா..."

தங்கள் பேச்சின் நடுவில் அதையும் மேவிக்கொண்டு வந்த அந்தக் குரலை அவர்கள் ஆவலுடனும் பரபரப்புடனும் தூரத்தே தேடினார்கள்.

அந்தக் கலகலப்பான நிலையிலும், அந்த யாசகனது கணீரென்ற குரல் மாத்திரமே அவர்கள் காதில் விழுந்திருக்கவேண்டும். அதன் பொருளைக் கண்டிப்பாக அவர்கள் உணராமலிருக்க முடியாது. எனினும், அருகில் நின்ற அவனை விட்டுவிட்டு, மற்றெல்லாத் திசைகளிலும் தேடக் காரணம்? ஒருகால் அதுவே ஏமாற்று வித்தைதானே? யாசகனிடமிருந்து கண்யமாகத் தப்புவதற்கு இதுவும் ஒரு வழியோ? யார் கண்டார்கள்?

"ஐயா, புண்ணியவான்களே! உங்களைத்தானுங்க ஐயா, உங்களுக்குக் கோடிப் புண்ணியமுண்டுங்க ஐயா. பார்த்து ஏதாவது உபகாரம் பண்ணுங்க ஐயா..."

அந்தக் குரல் அடுத்தடுத்துத் தொடர்ந்து கேட்டது. தேடும் பாவனையில் உள்ள அவர்கள் கவனத்தைத் தன் பக்கம் திருப்ப வேண்டும் என்ற ஆர்வம் அவன் முகத்தில் அரும்பி நின்றது. மறுபடியும், பழைய கிள்ளும் பசியும் சோர்வும் அவனிடம் குடிகொண்டன. மிக வணக்கமாகக் கெஞ்சும் முகத்தோடு, யாசிக்கும் பாவனையில் அவன் நின்றுகொண்டிருந்தான்; கைகள் கூம்பியிருந்தன.

எனினும் பிச்சைக்காரன் என்றால், எடுத்த எடுப்பிலேயே கற்பனை முன் நிற்கும் பாரம்பரியப் பிச்சைக்காரனின் உருவில் இல்லை அவன். மாநிறமாயிருந்தான். கலைந்து கிடந்த விரித்த தலை. முகத்தில் தேஜஸ் என்று குறிப்பாக ஒன்றும் சொல்ல முடியாவிட்டாலும், வெறுப்புத் தட்டக்கூடிய கொடூரம் இல்லை. பெரியம்மை விட்டுச் சென்றிருந்த வடுக்கள் முகத்திலே நிரம்பிக் கிடந்தன. க்ஷவரம் செய்துகொண்டு பல நாட்கள் ஆகியிருக்கும்போல் இருந்தது.

கம்மியிருந்த குரலைக் கனைத்துக்கொண்டு அவன் மீண்டும் யாசித்தான். பேசமுடியாமல் சக்தியற்றுக் கெஞ்சினான்.

அவர்களுக்குத் திட்டவட்டமாக அவன் நிற்கும் நோக்கம் புரிந்துவிட்டதால், எல்லோரது கண்களும் 'வெடு'க்கென்று

வேறுபுறம் திரும்பிக்கொண்டன. ஒருவரை யொருவர் பார்த்து விஷமப் புன்னகை புரிந்துகொண்டார்கள். அவனும் அதைக் கவனித்தான்.

யாசகனுக்கு நம்பிக்கை இழந்து போய்விட்டது. அடுத்தவன் பக்கம் போனான். பலனில்லை. அடுத்தவன்...... அடுத்தவன்... அதற்கும் அடுத்தவன்... ஊஹூம்...பலனில்லை...!

இந்தச் சமயத்தில் அந்தக் கூட்டத்தில் வந்து ஒருவர் புதிதாக உட்கார்ந்தார். யாசகன் அவரிடம் தன்னை அறிமுகப் படுத்திக்கொண்டான் தன் 'பல்லவி' மூலம். அவருக்கு ஆத்திரம் வந்துவிட்டது. ஏகத்தாளம் தொனிக்க, "பசிக்கும் பசிக்கும்...பீடி குடிக்கிறதற்கு... இந்தப் பசங்களுக்குக் கொடுக்கிற காசைக் குப்பையிலே கொட்டலாம் ஸார்... போடா...!" என்றார் நண்பர்களைப் புன்முறுவலோடு பார்த்துக்கொண்டு.

"ஐயா..." என்றான் யாசகன் ஏக்கத்தோடு; ஏதோ ஒரு நம்பிக்கை அவனுக்கு.

"போடா என்றால்...உடம்பு கல் மாதிரி இருக்கிறதே, வேலை செய்தால் என்ன கேடு?...உட்கார்ந்த இடத்திலேயே சாப்பிட வேண்டும்... இந்தப் பசங்கள் இப்படிச் சோம்பேறி வாழ்வு வாழ்ந்தால் சுயதேவைப் பூர்த்தி எப்படி ஸார் முடியும்?..." என்று அரசியல் குட்டையில் விழுந்து குழப்ப ஆரம்பித்தார் அவர்.

அவருக்குத் தன் பரிதாபக் கதையைச் சொன்னாலாவது இரங்கமாட்டாரா என்ற எண்ணம் அவனுள் எழுந்தது. "அதெல்லாமில்லிங்க. வேலையிலேதான் இருந்தேன்..." என்று சொல்ல - ஆரம்பித்தவனுக்கு, முடிக்க முடியாமல் தொண்டை அடைத்துக்கொண்டது

"பின்னே என் வந்துவிட்டாய்? அங்கே ஏதாவது பண்ணியிருப்பாய்?" என்றார் அவர் குத்தலாக.

"அப்படியெல்லாம் ஒண்ணுமில்லிங்க...பெண்சாதி, குட்டிப் படைகள் எல்லாத்தையும் அந்த மாரியாத்தா கொண்டு போயிட்டா...பாவி என்னையும் கொண்டுபோயிருக்கப்படாதா? இப்படி உசிரை வச்சுக் கொல்லுது..." என்றான் அவன் கண்களில் நீர் மல்க.

அவனையே அந்த நபர்கள் மௌனமாகப் பார்த்துக்கொண்டிருந்தார்கள்.

அவன் கண்களைத் துடைத்துக் கொண்டு மீண்டும் ஆரம்பித்தான். "அதுக்கப்புறம் கொஞ்சகாலம் புத்தி சரியில்லாமே அலைஞ்சுக்கிட்டிருந்தேனுங்க. இதனாலே இன்னிக்கு இதுமாதிரி ஏற்பட்டுதுங்க"—தழுதழுத்த குரலில் தன் சரிதத்தின் ஏற்றத் தாழ்வைச் சுருக்கமாகச் சொல்லி முடித்ததும் தலையைக் குனிந்து கொண்டான்.

புதிதாக வந்தவருக்குக் கோபம் பொத்துக்கொண்டு வந்துவிட்டது. "பசிக்கிறதாம் பசி...எனக்கும்தான் பசிக்கிறது...

போடா என்றால் போய்விடு...... இங்கே பேசுகிறபோது நடுவிலே.........போகமாட்டாய் ?" அவனைச் சிறிது நேரம் முறைத்துப்பார்த்தார். பிறகு ஒரு மண் கட்டியால் அவனைக் குறிபார்த்து அடித்தார்.

அவன் ஆடாமல் அசையாமல் நின்றுகொண்டிருந்தான். மண் கட்டி அவனது வீங்கிய காலில் அடிபட்டுஉடைந்துமண்ணாகியது.

அவன் நகராமலிருப்பதைப் பார்த்ததும், "ஊரிலே திருட்டுப் பயம் அதிகமாயிருக்கிறபோது இந்தப் பசங்களையெல்லாம் உள்ளே விடக்கூடாது, ஸார். ஆளையும், முழியையும் பாருங்கள். போலீசைக் கூப்பிட்டு 'லாக்கப்' பண்ணச்சொல்லவேண்டும், ஸார். திருட்டு ராஸ்கல்...போடா...... தோலை உரித்து விடுவேன்......" என்று உரக்கக் கூவினார் அவர்.

பசி என்ற காம்பில் இதுவரை அந்தரத்தில் தொங்கிககொண்டிருந்த அவனது உள்ளக்கனி சொல்லம்பால் சிறிது சிறிதாக நைந்து 'திருடன்' என்ற பேய்க் காற்றினால் 'படீர்' என அறுந்து விழுந்தது.

முகத்தைப் பொத்திக்கொண்டு 'கேவிக் கேவிக், குழந்தை போல அழுதான். விக்கலும் பெருமூச்சும் அவன் உயிரையே பறித்துச் சென்றுவிடுமோ என்று அஞ்சும்படி பயங்கரமாக இருந்தன. இடையிடையே "என்னைக்கொண்டுபோயேன்... உனக்குக் கண்ணில்லையா?..... உயிரை வச்சுக் கொல்லுறியே... கொண்டுபோயிடேன்" என்று பிரலாபித்தான். பழைய சித்தப் பிரமை மீண்டுவிட்டதோ என நினைக்கும்படி இருந்தன அவன் செய்கையும் தோற்றமும்.

"ஏய்...போடா என்றால்... பாசாங்கா பண்ணுகிறாய்" என்று இடி முழக்கம்போல் கர்ஜித்தார் அவர்.

விழுந்த கனி இன்னும் கால் அந்ழுதி நங்சுகியது

அவனுக்கு எதுவும் அத்தனை வருத்தம் கொடுக்கவில்லை. 'திருடன்'—அந்த ஒரு வார்த்தை, பட்டம்தான் அவனை அப்படியே வதைத்து எரிப்பதுபோலிருந்தது. உணர்வற்றவனாய்த் தடுமாறித், தடுமாறி நகர்ந்தான் பசியால் பஞ்சடைந்த கண்களோடு வந்தவன், சொல்லால் கலங்கிய கண்களுடன் வெளியேறினான் !

அவன் மனதிலே கணக்கற்ற எண்ணச் சுழல்கள்! உன்மத்தம்

பிடித்தவன்போல பூமி அதிரும்படி வேகமாக நடந்தான்; வெறித்து நோக்கியபடி பயந்து நின்றான்; கழுத்து ஓடிய வானத்தை நோக்கினான்; குனிந்து பூமியை உற்றுப் பார்த்தான்; மருளும் மான் போலச் சில சமயம் மருண்டான்; பழிவாங்கும் கண்ணகிபோலச் சில சமயம கொடூரமாகக் காணப்பட்டான்; நடந்தான்; ஓடினான்; நின்றான்.

"திருடன்... திருடன்... திருடன்"—வாய் அவனை அறியாமல் உளறியது. ஒவ்வொரு பதமும் ஈட்டியாகி அவன் உள்ளத்தைக் குடைந்தது.

"நான் திருடன்...ஆம்...... இவர்கள் சொத்தையெல்லாம் கொள்ளையடித்து..."— இரண்டு கைகளையும் முன்னால் கொணர்ந்து இறுகப் பிடித்து நெருக்கினான். பற்கள் நறநற வென்றன. நெற்றி நரம்புகள் புடைத்துக்கொண்டன. நெடுமூச்சுக்கள் வெடித்தன!

ஒரு புது வேகம் மின்னவிட்டது. திருடன்! கைகளைப் பலங்கொண்டமட்டும் நெருக்கினான். இரண்டுகைகளும் ஒன்று சேராவண்ணம் ஏதோ தடுத்தது. வலிக்க வேறு ஆரம்பித்தது. சுய உணர்வு வந்ததும் "ஆ! மரமா?" என்று வாய்விட்டு முணுமுணுத்தான்!

"மரம்......மரம்!"—உரக்கச் சிரித்தான். மரத்தை அர்த்தமில்லாமல் உதைத்தான். பின் வேகமாக வாயிலை நோக்கி நடந்தான்.

"நான் நேசிக்கும் பெண் அதோ போகிறாள்."

"நீங்கள் ஏன் அவளையே மணந்துகொள்ளக்கூடாது?"

"ஊஹூம்;" அவள் என்னுடைய வாடிக்கைக்கார நோயாளிப் பெண்...."

"தம்பி...நில்லு!"

"..........."

"ஏ, தம்பி, உன்னைத்தான்"

அந்த வார்த்தை அவனை ஒரு உலுக்கு உலுக்கி நிறுத்தியது. அவன் சரியானபடி சுய உணர்வு பெற்றான். வெளியே நின்றிருந்த பேய்க் காற்றைப்போல, அவன் உள்ளத்திலே வீசிக்கொண்டிருந்த சூறாவளியும் ஓரளவு அடங்கியிருந்தது. அந்த அன்பான வார்த்தை அவன் உள்ளத்தை உருக்கியது. "போ...போ...ஓடு...போகமாட்டாய்" என்றே கேட்டுப் பழக்கமான

அவனுக்கு, இந்த வார்த்தைகள் அளவற்ற ஆச்சரியத்தையே அளித்தன!

"மனம் நோவாதே தம்பி... அவுங்க சொல்றதையெல்லாம் நான் கேட்டுக்கிட்டுத்தான் இருந்தேன்...நீ சிறுசு...உனக்கு இன்னும் உலகம் தெரியல்லே... அவுங்க அப்படித்தான் பேசுவாங்க...அவங்க பேரிலே பிசகில்லே...கஷ்டம் தெரிஞ்சவங்களாயிருந்தா பிறத்தியார் சிரமம் தெரியும்...இதுக்காக மனசை அலட்டிக்காதே... இந்தா...ஏதாவது வாங்கிச் சாப்பிடு..." என்று தன் ஓட்டிலிருந்து இரண்டு நாணயங்களை எடுத்து நீட்டினான் அந்தப் பிச்சைக்காரன்.

யாசகன் அவனைப் பார்த்தான்; வறுமையின் முழுமை என்று பார்த்த உடனேயே தெரிந்தது!

யாசகனுக்கு அந்த நாணயங்களை வாங்கக் கைகூசியது. ஒரு கணம் யோசித்தான். அடுத்த கணம் அந்த நண்பர் குழாமைக் கடைக்கண்ணால் பார்த்துவிட்டு வாங்கிக்கொண்டான். ஆனந்தக் கண்ணீர் விழிகளிலே ததும்ப உணர்வின் வசப்பட்டவனாக "நீங்க மகராஜனா இருக்கணும்" என்றான்.

அப்பொழுது பூங்காவின் ரேடியோ அலறிக்கொண்டிருந்தது.

"பாரினிலே மன அமைதியுடன்
பிறர்துயர் அறிவார் யார்?
அறிந்து,
அவனுள்ளம் உணர்வார் யார்?
உணர்ந்து,
இன்சொல் உரைப்பார் யார்?
உரையும் செயலும் வேறின்றியே!"

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India, Under No. CDL/688

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) விலை ரூ. 8-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) ரூ. 10-8-0 (தபால் சிலவு தனி)

கர்ப்பதடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்) Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பரவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை. ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (தபால் சிலவு தனி)

Mfgrs: SEENU & CO., Post Box, 1638, ( ) MADRAS-1.
கிளை: பிரானச 134. SERANGOON ROAD. சிங்கப்பூர்.
சிலோன் ஏஜண்ட்: NEW COLOMBO MEDICAL STORES. 82 MAIN ST. கொழும்பு-11.

பொழுது போக்கு

பாலா

காஞ்சனா

சாதாரணமாகச் சமூகப் படங்கள் என்றால் அவை பெரும்பாலும் வெற்றிபெற முடியும்; வெற்றிபெற்றும் இருக்கின்றன. வெற்றியின் அளவு படத்தை உருவாக்கும் டைரக்ஷனைப் பொறுத்தது. அடுத்ததாகப் படத்தில் தோன்றும் நடிகர், நடிகையர்களைப் பொறுத்தது.

லட்சக்கணக்கான மக்களை மகிழச் செய்த கதை என்ற பெரிய விளம்பரங்கள் காஞ்சனா பவனி வருவதற்கு முன்னர் 'பராக்' கூறின. பிரபல டைரக்டர் ஸ்ரீராமுலு நாயுடு டைரக்ட் செய்திருக்கின்றார். தேர்ந்தெடுத்த நடிகர் கே. ஆர். ராமசாமி, 'மாஸ் அப்பீ'லுக்கு இணைந்து கொடுக்கும் லலிதா—பத்மினி சகோதரிகள் ஆகிய முக்கிய நட்சத்திரங்களும் நடித்திருக்கின்றார்கள்.

எல்லாம் இருந்தும் படம் ஏனோ அவ்வளவு திருப்திகரமாகப்படவில்லை!

கதை: ஜமீன்தார் புஷ்பநாதனின் ஆசைக் காதலி தாசி மகள் பானுமதி. அவரின் கட்டிய மனைவி காஞ்சனா. அதிருஷ்டம் அவளை ஜமீந்தாரிணியாக்குகிறது. தன் கலியாணம் எவ்விதத்திலும் பானுவைப் பாதிக்காது என்று உறுதி கூறுகிறார் புஷ்பநாதன். ஆனால் பானுவோ, தன் தாய் ஜமீந்தாரை மறந்துவிட்டுப் பட்டணம் போய்ச் சினிமாவில் சேர அடிக்கடி தூண்டியவாறு இருந்தும்கூட, அவள் அவரை மறக்கமுடியாதென்று கூறுகிறாள்.

குலகௌரவத்திற்கு ஒவ்வாத ஏழைப் பெண் என்று காஞ்சனா மாமியாரால் தூற்றப்படுகிறாள். தன் இடத்தைப் பற்றிக்கொண்டவள் காஞ்சனா என்று குமுறுகிறாள் பானு. அதே நிலையில், திருமணம் ஆன பிறகும் தாசியின் தொடர்பு அறுபடாதது கண்டு பானுவை வெறுக்கிறாள் காஞ்சனா. கடைசியில் குழந்தையும் கையுமாக யாருமறியாத நள்ளிரவிலே காஞ்சனா ஜமீன்மாளிகையைத் துறந்து செல்லவேண்டியிருக்கிறது.

இதற்குக் காரணம் புஷ்பநாதன்—அவரது கண்ட கண்ட பெண்களைக் காமுறும் போதைக் குணம்! விருந்தினராக வந்திருந்த உறவுப் பெண் டாக்டர் சீதாவின் மீது அவர் கண் விழ குத்துகிறது. டாக்டர் சீதா, காஞ்சனாவின் தமையன் டாக்டர் சபேசனைக் காதலித்தாள்.

பிரிந்தோடிய காஞ்சனாவிடமிருந்து அவளது மகனையும் பிரித்து எடுத்து வருகிறார் ஜமீன்தார். தாயற்ற குழந்தை துடிக்கிறது. நண்பன் ஒருவனை நம்பி மில்லில் ஏற்பட்ட நஷ்டத்தில் மனம் வெதும்பிய ஜமீன்தார், இறுதியில் காஞ்சனாவைச் சந்திக்கிறார், டாக்டர் சபேசன்—சீதா மணவிழாவின் போது. காஞ்சனாவின் கனவு நனவாகிறது. அவள் சம்மதம் கொண்டு, தான் முன் வாக்குக் கொடுத்த பிரகாரம் பானுவையும் தன் மனைவியாக்கிக் கொள்ளப் பானுவின் சம்மதம் பெற எண்ணியபோது அவள் ஒப்ப மறுக்கிறாள். அவள் உயிர் பிரிகிறது, காஞ்சனா-புஷ்பநாதன் தம்பதிகள் இணைந்திருக்க வரம் பெற்றுக்கொண்டு.

'அட்சராப்பியாசப் பகுதி' இல்லாமல் படத்தின் கதையை இத்துடன் முடித்திருக்கலாம்; இன்னும் கொஞ்சம் ரசிகர்களின் நல்லெண்ணத்தைக் கவர எத்தனித்திருக்கும்!

ஜமீந்தார் புஷ்பநாதனாகப் பிரதம பாகமேற்று நடிக்கிறார் கே. ஆர். ராமசாமி. கொடுத்த பகுதியைத் திறமையுடன் வெற்றிகரமாக நடிக்கக்கூடிய இவர், ஏனோ காஞ்சனாவில் அவ்வளவு சோபிக்க முடியவில்லை, சோபிக்கச் சோதனையிடும் கட்டங்கள் மிகுதியாக இருந்தும். அழகாகப் பாடக்கூடிய இவருக்குப் பாட்டிற்கும் அதிக சந்தர்ப்பம் கொடுக்கவில்லை. டைரக்டர் இவரை நன்கு பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டார் என்றால் சரியாகுமா?

தாசிப் பெண் பானுமதியாக வருகிறார் பத்மினி. வளர வளர அவர் முன்னேற்றம் வளர்ந்துசெல்கிறது. குறிப்பாக, குழந்தையைக் கொஞ்சி விளையாடும் கட்டம், இறுதியில் ஜமீன்தாருடன் தன் கடைசிப் பகுதியை நழுவவிடும் பகுதி உணர்ச்சிவசமாக அமைந்துள்ளன.

காஞ்சனாவாக நடிக்கும் லலிதாவின் பாகம் சற்று சிரமமானது; தன் பாகம் உணர்ந்து 'ஏ ஒன்' ஆக நடித்துவிட்டிருக்கிறார். ஆரம்பத்தில் உலகமறியாத கிராமப் பெண்ணாகத் தோன்றுவதும், தன்னிடமிருந்து குழந்தையைக் கணக்கப்பிள்ளையைக் கொண்டு பிடுங்க ஜமீன்தார் உத்தாவிடும் சமயம், அவள் வீறுகொண்டு எழும் சம்பவமும் 'ஆடியன்ஸ் இன்ட்ரஸ்ட்' பெற்றிருப்பனவாகும்.

சகோதரிகளின் நடனங்களைப் படத்துடன் இணைந்தனவாக அமைத்திருப்பது போற்றக் கூடியது.

ஜமீன்தாரின் நண்பனாக ஏதோ வந்து போகிறார் நம்பியார். பானு

வின் அம்மாவாக மாஜி நட்சத்திரம் சந்தானலட்சுமியும், ஜமீந்தாரின் தாயாக ஞானமும், படக் கம்பெனியாளர்கள் தங்கள் பெயரை நினைவில் வைத்துக் கொள்ளும் அளவிற்கு நன்றாக நடித்திருக்கிறார்கள். துரைராஜ் கணக்கப்பிள்ளையாகக் காட்சி தருகிறார், படத்தில் ஹாஸ்யப் பகுதி என்ற ஒன்றை ஏற்படுத்திக்கொள்ளும் பழக்கத்தைச் சீர் குலைத்துவிடாமல்!

வசனம் சில இடங்களில் மிக நேர்த்தியாக அமைந்திருக்கிறது. பாடல்களில் குறிப்பாக நிலாப் பாட்டு ரசிகர் உள்ளத்தைக் கவருவதாகும்.

கத்திரிக்கோல் பிரயோகம் செய்யப்பட வேண்டிய அவசிய மற்ற சில பகுதிகளைக் குறைத்து விட்டிருந்தால் படத்தின் 'டெம்போ' அதிகரித்திருக்கும்.

மொத்தத்தில் காஞ்சனா குடும்பத்துடன் பார்க்கவேண்டிய— பார்க்கக் கூடிய ஒரு அழகிய சமூகப் படம் என்பதில் சந்தேகமில்லை!

ஜீவப்போர்

வண்ணை இளங்கோ கலைமன்றத்தினர் சென்ற 10—5—52-ல் ஜீவப்போர் என்ற சமூக நாடகத்தை அரங்கேற்றம் செய்தார்கள்.

கதை: ஜமீன்தாரின் மகன் சந்திரன், ஏழைப்பெண் சுகுணாவைக் காதலித்து, பின்னர், கைவிட்டு, பணக்கார நாகரிக மங்கை மாலதியை மணக்கிறான். விளைவு, ஏழைக்குடும்பம் சிதறுகிறது. மாலதியின் போக்கில் மனமுடைந்த சந்திரன், எதிர் பாராது சுகுணாவைக் கண்டு தன் மடமையை உணர்ந்து மன்னிப்புக் கேட்டு, சுகுணாவுடன் வாழ்கிறான். மாலதி தற்கொலை செய்து கொள்கிறாள். சுகுணாவின் தமையன் மூர்த்தி வேம்புவால் கொல்லப்படுகிறான். பரதேசி சண்முகம் பிள்ளையால் கதைக்கு ஜீவனளித்து, சிதறுண்ட குடும்பங்களை ஒன்று சேர்த்து ஜீவப்போரின் அமைதி பரவுகிறது!

நாடகத்தில் கதாநாயகனாக எம். எஸ். சுப்பிரமணியம், சாலக்குடி ஜமீன்தாராக பழனியப்ப பாரதி, பரதேசியாக எஸ். பி. சுப்பையா, வில்லனாக கே. கே. ராமு, மூர்த்தியாக என். ஆர். நாதன் ஆகியவர்கள் தோன்றித் திறம்பட நடித்தார்கள். நடிகைகள் ஞானகுமாரி, மோகனா இருவரும் நாடகத்தின் தரம் உயர, 'டெம்போ' அதிகரித்து நிலவப் பாடுபட்டிருக்கின்றனர். பேபி வசந்தாவின் அழகான நடனம், கிள்ளைமொழிப் பேச்சு, ஆனந்தமான தோற்றம் நாடகத்தின் உயிர்த்துடிப்பாக அமைந்திருந்தது.

மொத்தத்தில் கதை, வசனம், டைரக்ஷன் பொறுப்பேற்ற நண்பர்கள் 'கலைப்பித்தன்', 'வால் நட்சத்திர'மாக இருந்து நாடகத்தன்று 'துருவ நட்சத்திரம்' என்ற புனைபெயர் பெற்ற எம். எஸ். சுப்பிரமணியம், இவர்களது பொறுப்பின்வெற்றியைப் போற்றத்தக்க அளவிலே ஜீவப்போர் நாடகம் அமைந்தது!

பேசிவிட்டோம்!

புதுமைச்சித்தன்

மன்னிப்பு!

ஒரு கணவன் தன் மனைவியிடம் மனம்விட்டு எப்படி மன்னிப்புக் கேட்பது? கணவன் என்ற சொல்லில் இருக்கும் அந்தஸ்து என்ன ஆவது? சுய கௌரவம் தான் அதற்கு இடங் கொடுக்குமா?...

அப்படியானால்...? எத்தனை நாளைக்குத் தான், இந்த மௌனத்தின் நரகவேதனையைச் சகித்துக்கொண்டிருப்பது? அவளோ பேசவே மாட்டேன் என்கிறாள்!

வீட்டிலிருப்பது மூன்று பேர்கள். ஒன்று ஆறுமாதக் குழந்தை; மற்ற இருவரும் கணவன், மனைவி. இந்த இருவரும் மௌனத்தைக் கைக்கொண்டுவிட்டால்...! வீடு எப்படி இருக்கும்?— வெறிச்சோடிப்போய் நிசப்தம் நிறைந்து கிடக்கும் மயானம் மாதிரி.

அவள் ஒரு வார்த்தைகூடப் பேசமாட்டேன் என்கிறாள்! என்றாலும் எவ்விதக் குறை சொல்வதற்கும் இடம் வைக்காமல் தன் கடமையைச் செய்கிறாள். வேளாவேளைக்கு வெந்நீர்—காப்பி—சாப்பாடு! யாவும் குறைவின்றி நடந்துவிடுகிறது. இருந்தாலும் அது ருசிக்கிறதா? கலகலப்பாகச் சிரித்துப் பேசாமல் விசை முடுக்கிவிடப்பட்ட யந்திரகதியில் ஒரு மனைவி செய்யும் பணிவிடைகளில் எந்தக் கணவனும் இனிமை காண முடியாதே!...

நான் அவளுடன் பேசி—இல்லை அவள் என்னுடன் பேசி நான்கு நாட்கள் ஆகின்றன! என்னுடன் பேசாமல் ஒரு நிமிடம் கூட இருக்க முடியாத அவளால், இந்த நான்கு நாட்களாக எப்படி இருக்க முடிகிறது?... வைராக்கியமா?... இல்லை—வீம்பு!

நான் அவளுடன் பேசத் துடித்தேன்! அவளும் என் நிலையில் தான்! ஆனால், யார் முதலில் பேசுவது? எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது? இதில் தான் சங்கடமெல்லாம்!...

'சாண்பிள்ளையானாலும் ஆண்பிள்ளை' என்ற வறட்டு ஜம்பத்துடன் நான் இருந்தேன். அவள், பிடிவாதம் மிகுந்தவர்கள் பெண்கள் என்பதை உண்மையாக்கிக் கொண்டிருந்தாள். பார்க்கப் போனால், உண்மையில் நான் தான் அவளிடம் மன்னிப்புக் கேட்கவேண்டும். அவள் பூப் போன்ற கன்னத்தில் முரட்டுத்தனமாக அறைந்து மூர்த்தண்யமான மிருகத்தைப்போல் நடந்துகொண்டவன் நான் தானே!...

* * *

அன்று மிகவும் உற்சாகத்துடன் எழுதிக்கொண்டிருந்

தேன். சிறுகதைதான். நல்ல ஓட்டம். ஒரு கையில் பேனா. மற்றொரு கையில் சிகரெட்.

சிறிது நேரம் சென்றது. எழுதிக்கொண்டிருக்கும் காகிதத்தை உற்றுப் பார்த்தபடியே கையில் புகைந்துகொண்டிருக்கும் சிகரெட்டின் சாம்பலைத் தட்டினேன். அருகில் தரையில் கிடத்தப்பட்டிருந்த குழந்தையை நான் கவனிக்கவில்லை. சிகரெட்டிலிருந்து தெறித்துக் கிளம்பிய ஒரு தீப்பொறி, எதிர்பாராதவிதமாகக் குழந்தையின் மேல் பட்டுவிட்டது.

'வீல்' என்ற கூக்குரலுடன் அலறித் துடித்தது குழந்தை. அதன் பிஞ்சு உடம்பில் தீப்பொறி பட்டால் தாங்க முடியுமா?

திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தேன். அலறல் சப்தம் கேட்டு ஓடிவந்த என் மனைவி குழந்தையைத் தூக்கிக்கொண்டாள். தீப்பொறி பட்ட இடத்தில் ஒரு கொப்பளம்! அதையும் என்னையும் முறைத்துப் பார்த்தாள்.

குழந்தை விடாமல் அழுதது!

"ஏங்க...நீங்களும் ஒரு மனிதர்தானா? நீங்க சிகரெட் பிடிக்கிற அழகு கண்ணுகூடத் தெரியலே!'' என்று பொரிந்தாள் பங்கஜம்.

சுவையான கற்பனையைக் கலைத்துவிட்ட இந்த நிகழ்ச்சி... பங்கஜத்தின் பேச்சு... அலறல் மயமாக வெளிப்பட்ட அழுகை... எல்லாமே எனக்கு எரிச்சலை ஊட்டின! கண்மண் தெரியாத கோபம். நான் செய்த தவறு எனக்கே தெரியவில்லை!

"நீங்களும் ஒரு மனிதர் தானா?''—அவள் கேள்வி விகாரக் குரலில் என் காதுகளில் ரீங்கரித்துக்கொண்டிருந்தது!

நாற்காலியிலிருந்து எழுந்தேன். 'பளீ'ரென்று அவள் கன்னத்தில் அறைந்தேன். அவள் பதில் பேசவில்லை! கண்ணீருடன் அங்கிருந்து சென்றுவிட்டாள். அதற்குப் பின் இந்த நான்கு நாட்களாக மௌனம் தான்!— மயான மௌனம்தான்!

* * *

அவசியம் பங்கஜத்துடன் எப்படியாவது இன்று பேசிவிட வேண்டும்! நானாவது ஆண்பிள்ளை. வெளியில் நண்பர்களுடன் பேசிச் சிரிக்க முடி

"பாலு, இன்று சரித்திரப் பரீட்சையை எப்படி எழுதியிருக்கிருய்?"

"அப்பா, நான் பிறப்பதற்கு முன் நடந்ததையெல்லாம் கேட்கிருர்கள். நான் எப்படிப் பதில் எழுத முடியும்?"

றது. ஆனல் பங்கஜம்......? அவள் பெண்! வீட்டிற்குள் அடைபட்டுக் கிடக்கும் ஜீவன்! யாரிடம் பேசுவாள்—சிரிப்பாள்?

என்ன பேசுவது? எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது? அது தான் புரியவில்லை!

சாப்பிடச் செல்வதற்காகக் கை கழுவச் செம்பை எடுத்தேன். 'சாப்பிட வாருங்கள்' என்று அவள் என்னை அழைக்கவில்லை! இலையைப் போட்டுவிட்டு, செம்பில் தண்ணீர் கொண்டு வந்து வைத்தாள். சாப்பிட வரலாம் என்பதற்கு அதுதான் அறிகுறி!

எதிர்பாராவிதமாகக் கையிலிருந்த செம்பு நழுவிக் காலில் விழுந்துவிட்டது. கால் கட்டைவிரலில் நகக் கண்ணில் காயம். இலேசாக ரத்தம் கசிந்தது.

நகக்கண்ணல்லவா? வலி தாள முடியவில்லை. "ஐயோ" என்று அலறிவிட்டேன்!

"என்னங்க?" – பதறிப்போய் ஓடிவந்தாள் பங்கஜம்.

"ஒண்ணுமில்லே...கை தவறிச் செம்பு காலிலே விழுந்திடுச்சு"

"பெரிய காயமோ? ரத்தம் இப்படிக் கசியிதே!..."

நாங்கள் பேசிவிட்டோம்! நான்கு நாட்களாக எனக்கும் அவளுக்கும் இடையில் பெரியதோர் தடைச் சுவர்போல நிலவிய மௌனம், இருந்தவிடம் தெரியாமல் மறைந்தது! அடுப்புக் கரியைப் பொடி செய்து காயத்தில் வைத்துக் கட்டினுள்.

"ரொம்ப வலிக்கிறதா?"

"நாலு நாளா நீ எங்கிட்டேப் பேசாமே இருந்தியே, அப்போதான் என் மனசு ரொம்ப வலிச்சிது!..." என்றேன் நான்.

குறும்புத்தனமான புன்னகையுடன் என்னைப் பார்த்துச் சிரித்தாள் பங்கஜம். அதில் தான் எவ்வளவு இனிமை!

Edited, Printed and Published by Murugu Subramanian for Ponni Ltd., at Ponni Achakam, 16, Seni Amman Koil Street, Tondiarpet. Madras-21

ஜூன் 14௳ முதல்

சென்னை

ஸ்ரீ கிருஷ்ணா — கெயிட்டி — ஸயானி

மற்றும் தமிழ்நாடெங்கும்—மலபாரிலும்

பூர்ண உரிமையாளர்கள்:

G. P. பிலிம்ஸ் — பொரையார்

Regd. No. M. 4849 PONNI